இதழ்-30

01.08.2021

# தூமி

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# தொழிலாகி விட்டதா பணி...?






எழுத்தறிவித்தவர்களை இறைவனாக பார்க்கச் சொன்னது எங்கள் பண்பாடு. மாணவர்களை ஏற்றி விட்டு அழகு பார்த்ததால்த்தான் ஏணிப்படிகளுக்கு ஒப்பிடப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் சிலர் இன்று ஆசிரியப்பணிக்கு அப்பாற் பட்டவர்களாக மாறிவிட்டார்கள்.

அள்ள அள்ள குறையாத கல்விச் செல்வத்தை பெற வேண்டுமென்றால் அள்ளி அள்ளி பணச் செல்வத்தை தரவேண்டும் என்கிற நிலைக்கு வந்து கொண்டிருக்கிறோம். பல்கலைக் கழகங்களில் இலவசக் கல்வி கேள்விக் குறியாவதாக போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் சத்தமே இல்லாமல் பாடசாலைக் கல்வியில் இலவசம் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

பாடசாலைகளை நம்பிய கல்வி என்பது கேள்விக்குறியாக்கப்பட்ட நேரத்தில் பாடசாலைகள் கொரோனாவால் மூடப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்ப டுத்தி விஸ்வரூபமெடுத்து நிற்கின் றன தனியார் கல்வி வியாபாரங்கள். இணைய வசதியை பெறவே பொருளாதார ரீதியில் பல மாணவர் களுக்கு இயலாமலுள்ள போது இணைய கட்டணம், பரீட்சை கட்டணம், வகுப்பு கட்டணம், அச்சுப் பிரதிகளுக்கான கட்டணம் என வசூலிக்கப்படுகிறது பணம்! பாதுகாப்பற்ற சமூக வலைத்தள குழுக்களில் பிள்ளைகளின் தொலைபேசி இலக்கங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான பல விரும்பத்தகாத நடவடிக்கைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

பிரபல ஆசான்கள் ஆகிவிட்ட நிலையில் அவர்களிடம் கற்றால்த் தான் சித்தியடைய முடியுமென்கிற எண்ணத்தை மாணவர்களிடம் விதைத்து விட்டார்கள். இதனால் பெருமளவான பிள்ளைகளும் பெற் றோரும் குறித்த ஆசிரியரிடமே எவ்வளவு கட்டணம் என்றாலும், எவ்வளவு ஏச்சு என்றாலும் செல்கின்றார்கள்.

ஆணிவேரான பாடசாலைக் கல்வி தனியார் மயப்படுத்தப்படுவதனால் வருகின்ற பாதிப்புக்கள் ஏராளம். ஒரு சில ஆசிரியர்களின் பேராசை காரணமாக இலவசக்கல்வி என்கிற வரப்பிரசாதம் இல்லாமல் போய்விடுமோ என்கிற அபாய சங்கை எழுப்ப வேண்டிய நேரம் இது.

***இருப்பவர்களிடம் வாங்குங்கள். இல்லாதவர்களிடம் இலவசமாய் வழங்குங்கள். கல்விதான் எங்கள் மூலதனம். அதை பெற மூலதனம் தேவை என்கிற நிலையை உருவாக்கி விடாதீர்கள!***

இணை ஆசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவிர்ணா

தும் பல்கலை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

வடிவமைப்பாளர்
வ. குணநிதன்

# இவ்விதழில் துமித்தவை...

04 சொந்தச் சிறைக்குள் சுதந்திரம்

06 முதலாளித்துவம்

08 ஆஹா! கல்யாணம்!

14 சிந்தனைக்கினிய கந்தபுராணம்

16 தோற்றுவிட்டேன்

19 குறுக்கெழுத்துப் போட்டி

20 குழந்தைகளும் கோவிட் பல்லுறுப்பு அழற்சியும்

22 சிங்ககிரித்தலைவன்

25 ஈழச் சூழலியல்

29 காலத்தை வகுப்பவனே அரசன்

31 பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்

34 கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

36 சித்திராங்கதா

40 கால்ப்பந்து ரசிகர்களுக்கு கொடையாகிப்போன கோடை

# சொந்தச் சிறைக்குள் சுதந்திரம்

யார் வீட்டுக்குள்ளும் தனக்கென்று தனிவீடு கட்டிக்கொள்ளும் தன்மரியாதைப் பூச்சி. உணவு, உடை, உறையுள் என மனிதனின் அடிப்படைத் தேவைகள் தனித்தனியானவை. ஆனால் வலை பின்னுகின்ற சிலந்திக்கு அவை மூன்றும் ஒன்றாகி விடுகிறது. எச்சில் நூலினாலே வலை எனும் உடை உடுத்தி அதன் மூலமே தனக்கொரு வீட்டைக் கட்டி அதைக்கொண்டே உணவையும் சம்பாதித்து விடுகிறது புத்திசாலிப் பூச்சி.

சிலந்தியைப் பார்த்த கண்களால் இப்போது உலகத்தையும் கொஞ்சம் பாருங்கள். எத்தனை வலைகள் இங்கு இரைக்காக காத்திருக்கின்றன என்று பாருங்கள்.

தன் கரிய இழைகளால் வலைபின்னுகிறது இரவு. அதில் சிக்கித் துடிக்கின்றன நட்சத்திர ஈக்கள்.

தன் கிரணங்களால் வலை பின்னுகிறது சூரியன். அதற்கு இருளே இரையாகிறது.

அதோ ஒருத்தி அலங்காரங்களால் வலை விரித்து இரைக்காகக் காத்திருக்கிறாள்.

பிரபஞ்சம் என்கிற வலையை பின்னி விட்டுக்கொண்டு யாருக்கும் தெரியாமல் ஒருவன் ஒளிந்திருக்கிறானே, அவனும் ஒரு சிலந்தியல்லவா?

சிலந்தியின் விம்பங்களை இப்படி எங்கும் காணலாம். ஆனால் வலைபின்னி இரைக்காகக் காத்திருக்கின்ற சிலந்திக்கு வலையில் இரை விழுகிறதோ இல்லையோ அவ்வலை தாண்டி சிலந்திக்கே விடுதலை இல்லை என்பது யாவரும் மறந்த ஓர் உண்மையாகும்.

சிலந்தி தன் சுதந்திரத்தை விரும்புவதில்லை போலும். ஏன் நாம் மட்டும் விரும்பிகிறோமோ?

சுதந்திரத்தைப் பேசுகின்றோம்? உண்மையில் அதை அடைய வேண்டும் என்று எண்ணம்



கொள்கிறோமா? நாமும் சிலந்தியைப்போல் சிறைக்குள் இருக்கத்தானே விரும்புகிறோம். இரைக்காகக் காத்திருக்கும் அவசரத்தில் சொந்த சிறைக்குள்ளே நாம் சிக்குப்பட்டிருப்பதை மறந்து விடுகிறோம்.

அன்பு, பாசம், நேசம், நட்பு என்கிற வலைகளைப் பின்னிக்கொண்டு நாமே அதற்குள் சிறைப்பட்டு நிற்பதை பற்றி சிந்தித்திருக்கின்றோமா?

மனிதன் எப்போதும் இந்த சிறையிலிருந்து விடுபட விரும்புவதில்லை. சிலந்தியைப்போல சிறையே தன் ஆபரணம் என்றல்லவா எண்ணி இன்பம் கொள்கிறான்.

அடிமையாய் இருப்பதே ஆனந்தம் என்பதற்குக் காதல் துறையை விட வேறென்ன சான்று வேண்டும்? அதுதான் எவ்வளவு அதிசயமான சிறை? அங்கே கைதியாகவல்லவா எல்லோரும் போராடுகிறார்கள்.

திறக்கின்ற பாடசாலைகள் சிறைச்சாலைகளைப் பூட்டுகின்றன என்றார் ஓர் அறிஞர். அறிவுக்கண் திறக்கையில் நம் சொந்த சிறைகள் அழிகின்றனவா? அல்லது உருமாறுகின்றனவா?

இசையோ, மொழியோ, அறிவியலோ, வணிகமோ நாம் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விடயங்களுக்கும் நாம் அடிமையாகிக் கொண்டுதானே செல்கிறோம். அதிக விடயத்திற்கு அடிமையானவனையே பேரறிஞன் என்று சொல்கிறோம். தத்துவம், சித்தாந்தம், லட்சியம் என்று எம் ஒவ்வொருவரையும் சுற்றி ஒவ்வொருவிதமாய் வலைச் சிறைகளை மூடியமைத்துள்ளோம்.

“பற்றெல்லாம் விட்டு விடு” என்று உபதேசிப்பவர்கள் கூட விடுதலைக்கு வழிகாட்டவில்லை. புதியதோர் சிறையையே அறிமுகப்படுத்துகிறார்கள்.

சுதந்திரமாக இருக்க யாராலும் இங்கு முடிவதில்லை. ஏனெனில் யாரும் அதை விரும்புவதில்லை. உண்மையில் நம் சுதந்திரம் என்பதே எமக்கு விருப்பமான சிறையை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமைதான்.

ஆம். நாம் நமது சொந்தச்சிறைகளின் கைதிகளாக இருப்பதையே விரும்புகிறோம். அதையே சுதந்திரம் என்று கொண்டாடுகிறோம்.

நீங்கள் நேர்ந்தெடுக்கும் உங்கள் சொந்த சிறைகள் குறித்து இனி மிகுந்த எச்சரிக்கையோடு இருங்கள். ஏனென்றால் உங்களுடைய பெருமைகள் எல்லாமே நீங்கள் எந்தச்சிறையின் கைதி என்பதைப் பொறுத்தே இருக்கின்றன.

பட்டாம்பூச்சி போல் சிறகுகள் கொள்ள ஆசை கொள்ள முதல் சிலந்தியைப்போல் நீங்கள் கட்டிய கூட்டுக்குள் முதலில் மகிழ்ச்சியாய் சிறையிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.



1

# முதலாளித்துவம்

CAPTALISM

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

முதலாளித்துவம் என்பது, உற்ப த்திச் சாதனங்கள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டுக் குள் இருக்கும் ஒரு பொருளியல் முறைமையாகும்.

**அத்துடன் இம்முறையில், முதலீடு, விநியோகம், வருமானம், உற்பத்தி, பொருள்களின் விலை குறித்தல், சேவைகள் என்பன சந்தைப் பொருளாதாரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன.**

இதில், மூலதனப் பொருட்கள், கூலி, நிலம் மற்றும் பணம் ஆகியவற்றில் வணிகத்தில் ஈடுபடுவதற்கான தனிப்பட்டவர்களினதும், சட்ட அடிப்படையில் நபர்களாகச் செயற் படும் தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுக்களினதும், உரிமைகள் தொடர்புபடுகின்றன.

பல நூற்றாண்டுகள் கொண்ட சிக்கலான வரலாற்றை சுருக்கிக் கூற நினைப்பது ஒரு சிரமமானது தான். இருந்தும் அரசியலில் தவிர்க்க முடியாத பகுதி இது. இருந்தும் சுருக்கமாக எடுத்து நோக்குவோம்.

## கார்ல் பொலொனி(Karl Polanyi)

முதலாளித்துவத்தின் பிறப்பு அதற்கு முந்தைய சமுதாய இயக்கங்களோடு ஒரு உண்மையான பிளவை ஏற்படுத்துகிறது.

“சந்தைகளோடு செயல்படும் சமுதாயங்கள்” என்றும் “சந்தைச் சமுதாயங்கள்” என்றும் ஓர் அடிப்படை வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. ஆகவே சந்தை என்பது முதலாளித்துவத்தைக் குறிப்பதாகக் கொள்ளக் கூடாது, சந்தை என்பது முதலாளித்துவத்துக்கு முன்னாலும் இருந்தது” என்கிறார்.

## மேக்ஸ் வெபர் (Max weber)

“தனி மனிதன் சந்தை பொருளாதார த்தில் உறவில் தன்னை ஈடுபடுத்திக்



கொள்ளும் பொழுது, அவன் முதலாளித்துவ விதிகளுக்கு கட்டுப்பட வேண்டியுள்ளது. ழுதொடர்ந்து கட்டுப்படாமல் நடப்பவன் தூக்கியெறியப்படுவான்" என்கிறார்.

**தாமஸ் ஜோசப் டன்னிங் (Thomas Joseph Dunning)**

இயற்கை வெற்றிடத்தை வெறுப்பது போல் மூலதனம் இலாபமின்மையை அல்லது குறைந்த இலாபத்தை வெறுக்கிறது. இலாபம் சரிவரக் கிடைப்பதைப் பொறுத்துத்தான் அது பலமடைகிறது.

10% இலாபம் நிச்சயம் என்றால் அது எல்லா இடத்திலும் வேலை செய்யும். 20% இலாபம் என்றால் சூடு பிடிக்கும். 50% இலாபம் என்றால் அதன் தைரியம் அளவுக்கு மீறி அதிகரிக்கும். 100% என்றால் மனித நியாயங்களை எல்லாம் காலில் போட்டு மிதிக்கும். 300% என்றால் கொலை பாதகத்திற்கும் அஞ்சாது - தூக்குக் கயிறை எதிர் கொள்ள வேண்டுமென்றாலும் கூட என முதலாளித்துவ மனநிலையை விளக்குகிறார்.



நிலப் பிரபுத்துவத்தின் முடிவுக்குப் பின்னர், முதலாளித்துவம் மேலை நாடுகளில் முதன்மை பெற்று விளங்கியது.

முதலாளித்துவம் 16 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுக்கு இடையில் ஐரோப்பாவில் நிறுவ னப்படுத்தப்பட்டது. வணிக முதலாளித்துவத்தின் தொடக்க வடிவங்கள் மத்திய காலத்தில் சிறப்புற்று விளங்கின.

இது இங்கிருந்து, சிறப்பாக இங்கிலாந்தில் இருந்து படிப்படியாக அரசியல் மற்றும் பண்பாட்டு எல்லைகளைக் கடந்து பிற இடங்களுக்கும் பரவியது.

முதலாளித்துவம் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில், உலகம் முழுவதிலும் தொழில் மயமாக்க த்துக்கான முக்கிய காரணியாக விளங்கியது.

***முதலாளித்துவ வகைகள்***

1. விவசாய முதலாளித்துவம்
2. வியாபாரத்துவம்
3. தொழில்துறை முதலாளித்துவம்
4. நவீன முதலாளித்துவம்

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த முதலாளித்துவம் எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

***சாரல் தூறும்..........!!!!!***




இ.தனிஷ்ரன்

**வயது ~ இருபத்தொன்பது வருடங்கள் எட்டு மாதங்கள்.**
**தொழில் ~ விஞ்ஞான ஆசிரியை.**
**விவாக நிலை ~ தனியாள்.**

வீட்டில் வரன் தேட ஆரம்பித்து ஐந்து வருடங்கள். இவளுடைய கிரகநிலைக்கு பொருத்தம் இன்னும் எட்டாக்கனியாக இருக்கிறது. இளமை அரும்பி ஊஞ்சலாடும் பருவத்தில் வந்த அத்தனை காதல் கடிதங்களையும் நிராகரித்து விட்டு, இன்று காதோரம் நரைக்க ஆரம்பித்திருக்கும் முடிகளை மறைக்கவே கண்ணாடியின் சிறிது நேரத்தை அதிகம் செலவு செய்துகொண்டிருக்கிறாள்.

“காதல் கொண்டேன்
கனவினை வளர்த்தேன்
கண்மணி உனை நான் கருத்தினில் நிறைத்தேன்
உனக்கே உயிரானேன்
எந்நாளும் எனை நீ மறவாதே
நீ இல்லாமல் எது நிம்மதி
நீ தானே என் சந்நிதி”

என்று, சாதாரண தரம் தொடங்கி கல்லூரி காலங்கள் வரை அவளிடம் காதல் விண்ணப்பம் செய்த அத்தனை ஆண்களையுமே பெற்றோர் விருப்பத்தின் படியே மணம் முடிப்பது என்ற வைராக்கியத்தில் நிராகரித்து விட்டாள். கூடப் படித்த அத்தனை தோழிகளின் திருமணங்களுக்கும் சென்று வந்துவிட்டாள். அங்கெல்லாம் அவள் சந்திக்கும் ஒரே கேள்வி,

**உனக்கு எப்ப கலியாணம்?**

காலம் உருள அந்த கேள்வி தொடர்ந்து அவளை துரத்திக்கொண்டே இருந்தது. பதில் தெரியாத கேள்வியை சுமந்து கொண்டு நாளும் வேதனையில் குமுறுவாள். பின்னர் எதுவோ நமக்கு நடக்க இருந்தால் நடக்கும் என்று தன்னை தேற்றிக்கொண்டு பாடசாலை - வீடு என்று பயணப்பட்டுக் கொண்டிருக்கிறாள். திருமணம் பற்றிய அத்தனை ஆசைகளும் எங்கோ ஒரு மூலையில் பூட்டப்பட்டு தூசி படிந்திருக்கிறது.

“இது தானா இது தானா
எதிர்பார்த்த அந்நாளும் இது தானா
இவன் தானா இவன் தானா
மலர் சூட்டும் மணவாளன் இவன் தானா
பகலிலும் நான் கண்ட கனவுகள் நனவாக



உனதானேன் நான் உனதானேன்
திருமண நாள் எண்ணி நகர்ந்திடும் என் நாட்கள்
சுகமான ஒரு சுமையானேன்"

அதிசயம், அவளினாலேயே நம்ப முடியாத அற்புதம். அத்தனை காலமும் அவளின் காத்திருப்புக்கான பதில் கிடைத்துவிட்டது. இரு வீட்டாரும் கலந்து பேசி சம்பந்த கலப்பும் முடிந்தது. இளமை துடிப்பு ததும்பும் வயதிலிருந்து சேமித்த திருமணம் தொடர்பான அத்தனை எதிர்பார்ப்புகளும் இப்பொழுது மீள பெருக்கெடுக்கிறது.



//திருமண மலர்கள் தருவாயா
தோட்டத்தில் நான்
வைத்த பூச்செடியே
தினம் ஒரு கனியை தருவாயா
வீட்டுக்குள் நான் வைத்த மாதுளையே
மலர்வாய் மலர்வாய் கொடியே
கனிவாய் கனிவாய் மரமே
நதியும் கரையும் அருகே
நானும் அவனும் அருகே//

குதூகலமாக இருக்கிறாள். அவளுடைய மகிழ்ச்சிக்கு வானமே எல்லை. தன்னுடைய அத்தனை தோழிகளுக்கும் நேரிலும் தொலைபேசியிலும் திருமண அழைப்புக்கள். அவள் மட்டுமன்றி, அதுவரை இவள் எதிர்காலத்தை எண்ணி வருந்திய குடும்பமும் இப்பொழுது மகிழ்ச்சிக்கடலில் மிதக்கிறது.

"என்னவோ என்னவோ
என்வசம் நானில்லை
என்ன நான் சொல்வதோ
என்னிடம் வார்த்தையில்லை
உன் சுவாசத்திலே
நான் சேர்ந்திருப்பேன்
உன் ஆயுள் வரை தான்
வாழ்ந்திருப்பேன்
என்னோடு நீயாக
உன்னோடு நானாகவோ
ப்ரியமானவனே!"

அவனுடன் மணமேடையில் மணமகளாக அமரப்போகும் அந்த நொடிக்கான காத்திருப்பில் அவள்.

வீடு மீள திருத்தி அமைக்கப்பட்டு, புதிதாக வர்ணங்கள் தீட்டப்பட்டது. நாள் நெருங்க சொந்தங்கள் எல்லாம் கூடி பலகாரங்கள் சுட ஆரம்பித்தார்கள். அதனை ஜன்னல் வழி ஒளிந்து பார்க்கும் இவளோ,

"இதழ் பிரிக்காமல் குரல் எழுப்பாமல் நான் எனக்கான ஒரு பாடல் பாடிக்கொள்வேன்"

பொன்னுருக்கும் முடிந்தது. நாளை மறுதினம் திருமணம். அவளுடைய தோழிகள் வர ஆரம்பித்திருக்கிறார்கள். வீடு முழுதும் கொண்டாட்டத்தின்

உச்சத்தில் இருக்கிறது. வெளியில் வாழைமரங்கள் கட்டு வதையும் சொக்கட்டான் பந்தல் அலங்காரங்களையும் சீரியல் பல்ப் கொழுவுவதையும் வேடிக்கை பார்க்கும் இவளுக்குள் ஏதோ பரவசம்.

“வானவில்ல கொண்டு வந்து
வளைச்சு கட்டி பந்தல் போடு
விண்மீன் எல்லாம் கொட்டி வந்து
சீரியல் பல்பா மாத்தி போடு”

நாளை திருமணம். திருமண சேலை, நகை, அலங்காரங்கள் அத்தனையும் ரெடி. தூர இடங்களில் இருந்து வந்த தோழிகளெல்லாம் இவளது மாப்பிள்ளை பற்றி விசாரிக்க ஆரம்பிக்கிறார்கள்,

“யாரோ யாரோடி ஒன்னோட புருசன்
யாரோ யாரோடி உன் திமிருக்கு அரசன்”

மணமேடையில் அந்தணர் மந்திரம் ஓதி அக்னி வளர்க்க, அங்கே மணாளன் இவளை பாத்திருக்கிறான். இவள் மணப்பெண் அலங்காரத்துடன் முகத்திரை அணிந்து கையில் மலர்மாலையுடன் தோழிகள் சகிதம் மெதுவாக மணமேடையை நோக்கி நடந்து வருகிறாள். நாதஸ்வரத்தில்,

“வாராய் என் தோழி வாராயோ
மணப்பந்தல் காண வாராயோ?
மணமேடை தன்னில் மணமே காணும்
திருநாளைக் காண வாராயோ?”

இசைக்க, மணமேடையேறி கையில் கொண்டு வந்த மாலையை தன்னவனுக்கு சூட்டினாள். மேளமும் நாதஸ்வரமும் மங்கல கீதம் பொழிய அந்தணர் சொல்லும் செய்முறைகளை செய்து கொண்டே, மண்டபத்தில் நிறைந்து கொண்டிருக்கும் விருந்தினர்களையும் அவர்களை வரவேற்று உபசரிக்கும் தன் உறவினர்கள்களையும் சுற்றி கண்களால் உலா வந்தாள்.

“வாங்க வாங்க என்று சொல்லணும்
சொல்லி சொல்லி
வாயும் வலிக்கணும்
வந்தவங்க வயிறு நெறையனும்
வாழ்த்து சொல்லி
நெஞ்சு நெறையனும்”

கூறை மாற்றி வந்து, பெரியவர்கள் மலர் தூவி அர்ச்சதை போட தவில் நாதஸ்வரம் முழங்க மாப்பிள்ளை தாலி கட்டினான்.

“மூணு முடிச்சு போடுவதெதுக்கு
உரிமைக்காக ஒத்த முடிச்சு
உறவுக்காக ரெண்டாம் முடிச்சு
ஊருக்காக மூணாம் முடிச்சு”

கழுத்தில் தாலியேற அதுவரை அவள் தேக்கி வைத்திருந்த



அத்தனை சோகங்களும் தன்னவனின் திடீர் வரவினால் பொங்கி வழிந்த மகிழ்ச்சி ஊற்றும் சேர்ந்து கண்ணீர் குடங்களை உடைத்து விட்டது. ஊராரின் வசைகளை கேட்டு எத்தனையோ இரவுகள் தூக்கம் விழித்து தலையணை நனைத்தவள் கண்களில் ஆனந்தக்கண்ணீர்.

"மரகத வள்ளிக்கு
மணக்கோலம் - என்
மங்கலச் செல்விக்கு மலர்க்கோலம்!
கண்மணித் தாமரை
கால் கொண்டு நடந்தாள்
கண்களில் ஏன் இந்த நீர்க்கோலம்?
கோலம்! திருக்கோலம்! "

அவள் கண்கள் மட்டுமன்றி பெற்றோரின் கண்களும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது.

பின்னர், நெற்றியிலும் கட்டிய தாலியிலும் குங்குமம் தரித்து, அம்மி மிதித்து, மெட்டி அணிந்து, யாக குண்டம் சுற்றி, அத்தனை சொந்தங்களும் கூடி, அர்ச்சதை அரிசி போட்டு, அன்பளிப்புகளை அள்ளி வழங்க இவளுடைய திருமணம் பெரும் கொண்டாட்டமாக நடந்து முடிந்தது.



"உள்ள சொந்தமெல்லாம் சேர்ந்து
வந்து திருமணத்தை நடத்துரப்போ
அடடா ஆட்டம் பாட்டம் தான்
அந்த கல்யாணமே அழகா பூத்த
தோட்டம் தான்"

அனைவருக்கும் மதிய விருந்து. பலவகை கறிகள், வடை, பாயாசம் என்று தடல்புடலான விருந்து.

"பச்சை இலை பந்திய போட்டா
மொத்த சனமும் தேடுது சோறு"

தன்னவனுடன் இவளும் சபைக்கு செல்கிறாள். அவன் கூட இருக்கின்றான் என்ற சந்தோஷம் தாண்டி அதுவரை அவள் அனுபவித்த வலி அத்தனையும் சந்தோஷ சூரியனின் வெப்பத்தால் ஆவியாகிக் கொண்டிருப்பதை ரசித்துக் கொண்டிருந்தவள், தன்னை துயரக்கடலிலிருந்து மீட்க வந்த தலைவனை இப்பொழுது முழுவதுமாக ரசிக்கிறாள்! யார் அவன்?

//பாவாடை அவிழும் வயதில்
கயிறு கட்டி விட்டவன் எவனோ
தாலி கட்ட வந்தவன்
அவனே உறவானவன்
கொலுசுயிடும் ஓசை கேட்டே
மனசில் உள்ள பாஷை சொல்வான்
மழை நின்ற
மலரை போல பதமானவன்
உறவெல்லாம் ஒன்றாய் ஒன்றாய்
கூடியவன்//

அவன் அமெரிக்காவில் மென்பொருள்

இயந்திரவியலாளன். இவளது குடும்பம் தொண்ணூறுகளின் போர்க்காலத்தில் இடம்பெயர்ந்திருந்த போது, அவனுடைய குடும்பமும் அதே வீட்டில் இடம்பெயர்ந்து இருந்தார்கள். இவளுக்கு அப்பொழுது எட்டு வயது அவனுக்கு பதினொன்று. இடம்பெயர்ந்து இருந்த போது இரண்டு வருடங்களும் இரு குடும்பமுமே ஒரே குடும்பமாக வாழ்ந்தவர்கள். இவளும் அவனும் சேர்ந்தே விளையாடுவார்கள். கூடவே சுற்றுவார்கள். வெளியில் எங்கு சென்றாலும் அவளை கவனமாக பார்த்துக்கொண்டவன்.

போரோடு அவனுடைய குடும்பம் அப்படியே வெளிநாடு சென்று விட, இவர்கள் போர் முடிய மீண்டும் தங்களது இருப்பிடம் வந்துவிட்டார்கள். பின் எந்த தொடர்பும் இல்லை. இப்பொழுது அவர்கள் குடும்பமாக நாடு திரும்பிய போது இவர்களை தேடி வீட்டுக்கு வர, அவனுக்கு இவளை கண்டதும் பிடித்து விட்டது. பொருத்தங்களும் கூடி வர, சந்தோச மழை பொழிய ஆரம்பித்தது.

“மலரென்ற உறவு பறிக்கும் வரை!
மகளென்ற உறவு கொடுக்கும் வரை!
உறவொன்று வருவதில்
மகிழ்ந்து விட்டேன்!
உறவொன்று பிரிவதில்
அழுதுவிட்டேன்!
எந்தன் வீட்டுக் கன்று இன்று
எட்டி எட்டிப் போகிறது!
கண்ணின் ஓரம் கண்ணீர் வந்து
எட்டி எட்டிப் பார்க்கிறது!”

மணமகன் வீட்டுக்கு வழியனுப்பும் போது தாய் தந்தையின் கண்கள் குளமாகியது. இவளுடைய கண்களிலும் இருபத்தொன்பது வருட நேசம் பெருக்கெடுத்தது.

//தாலி கொள்ளும் பெண்கள்
தாயை நீங்கும்போது
கண்ணோடு குற்றாலம் காண்பதுண்டு//

தன்னவன் கைய பிடித்தபடியே காரிற்குள் ஏறும் முன், தான் அதுவரை வாழ்ந்த வீட்டை ஏக்கத்தோடு பார்க்கிறாள்.

//மாடி கொண்ட ஊஞ்சல்
மடி மேல் கொஞ்சும் பூனை
சொல்லாமல் போகின்ற சோகம் உண்டு//

அவள் அழ, சொந்தங்களின் கண்களிலும் கண்ணீர். தன்னவனுடைய தாயும் தந்தையும் அவள் ஏற்கனவே மாமா , அத்தை என்று அழைத்து மகிழ்ந்த அவர்கள், இவளை சமாதானம் செய்தார்கள்.

//கன்னம் கிள்ளும் மாமி
காதை திருகும் மாமா
என்போல சொந்தங்கள் யார்க்கு உண்டு
இப்படி ஓர் நல்லுறவு வாய்த்திடுமா//

தன்னவனின் தாய், அந்நாட்களில் தனக்கு உணவு ஊட்டிவிட்ட நினைவுகள், அவளை கட்டிப் பிடித்துக்கொண்டே உறங்கிய நாட்கள், அவளுடன் கோயில்

திருவிழாக்களுக்கு சென்று வந்த நினைவுகள் அத்தனையும் மீண்டும் அலையடிக்க, அம்மா என்று விக்கித்து அவளை கட்டிக்கொண்டு அழுதாள்.

//மாதம் பத்து செல்ல
மழலை பெற்றுக்கொள்ள
அம்மம்மா தாய்வீடு ரெண்டு உண்டு
பிறந்த இடம் புகுந்த இடம் வேறு இல்லை
ஞாயிறுக்கும் திங்களுக்கும் தூரம் இல்லை//

தன்னவன் தாயை தன் தாயாக்கி நெகிழ்ந்த அதே நேரத்திலேயே, அதுவரை திருமணம் பற்றிய கனவில் இருந்தவளுக்கு "தான் தாயாகும்" நாள் பற்றிய கனவுகள் இறக்கை முளைக்க ஆரம்பித்தது. தன்னுடைய தோழிகள் எல்லாம் தங்கள் குழந்தைகளை அள்ளிக்கொஞ்சும் போது ஏற்பட்ட ஏக்கத்தின் மிச்சம் அது.

//போனவுடன் கடிதம் போடு
புதினாவும் கீரையும் சேரு
புத்திமதி சொல்லும் தாயின்
மொழியே இல்லை//

திருமணமானதும் உணவில் ஏன் கீரை வகை சேர்க்க வேண்டும்? மகப்பேற்று காலத்தின் போது சிசு வளரும் பொழுது அதன் மூளை, முன்னாண் போன்றவற்றின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு "போலிக் ஆசிட்" என்ற விற்றமீனும் குழந்தையின் குருதிக் கலங்களின் வளமான உற்பத்திக்கு "இரும்புச்சத்தும்" அவசியம். இது இரண்டு கீரை வகைகளில் அதிகம் இருக்கிறது. அதனால் பழைய காலங்களில் புதிதாக திருமணமான பெண்ணுக்கு இப்படியான அறிவுரைகள் வழங்கப்படும். அம்மாவின் இப்படியான அறிவுரைகள் எப்பொழுது வரும் என்ற எதிர்பார்ப்பு, மழலை கனவுடன் சேர்த்து கீச்சம் போடுகிறது.

//தெய்வங்களும் எங்களை தான் நேசிக்குமே
தேவதைகள் வாழ்த்து மடல் வாசிக்குமே//

அத்தனை உறவுகளும் நீர் படித்த கண்களினால் வாழ்த்தி நிற்க, வாடும் நிலையில் இருந்த முல்லைக்கொடி ஒன்று சந்தோஷ மழையில் செழித்து மகிழ்ச்சி பூக்களால் மலர்ந்து தன்னவனின் கைகளை பற்றிக்கொண்டு கார் உள்ளேயிருக்க, கார் புறப்பட்டது.



"வைகறை பனியே பூமியின் அழகு
வாழ்க்கையின் துணையே வாலிப அழகு
ஏற்றிய தீபங்கள் கோவிலின் அழகு
மார்கழி கோலங்கள் வாசலில் அழகு
நீ எனக்கும் நான் உனக்கும் அழகு
அழகு அழகோ அழகு"

# சிந்தனைக்கினிய கந்தபுராணம்

அதிரன்

4

காதல் முருகனைக் காதலி
முருகு என்பது அழகு. அதன் மறு பெயர் அன்பு. அவன் பால் காதல் கொண்டோர் அனேகர். இறைவனின் இரு-பெண் திருமணம் சமூக சமத்துவத்தைக் காட்டி நிற்கிறது. தேவலோக அரசனின் மகளைத் திருமணம் செய்த அதே இறைவன், தானே வலிய வந்து மனிதர்களில், அதிலும் சாதி முதலிய வேறுபாடுகள் பாராமல் வேடுவர் குல மகளைத் திருமணம் செய்திருக்கிறான். இதை நம் புராணங்கள் மிகவும் தெளிவாகக் காட்டி வந்துள்ளன.

இவை தவிர பூவுலகைச் சேர்ந்த வள்ளியம்மைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்து தனிச்சிறப்பு. எவருமே "முருகனுக்கு வள்ளி" என்றே கூறக் கேட்கிறோம். மேலும் வள்ளி தமிழ் மகள். இது தமிழுக்குக் கிடைத்த சிறப்பு.



"...ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே.."

என்று இதைப் பற்றி அருணகிரிப் பெருமான் உருகிப்பாடுகிறார்.

ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்விற்கு இந்துப்பண்பாடு கொடுத்த முதன்மையையும், காதற் சிறப்பையும், அன்னை உமையாளுக்கும் இறைவனுக்கும் நிகழ்ந்த திருமணமும் வெளிப்படுத்துகின்றது.

"கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்ற ஞானசம்பந்தர் வாக்கு சிந்திக்கத் தக்கது.

## சைவ – வைஷ்ணவ ஒற்றுமை

கந்தபுராணக் கதையுடன் இராமாயணக் கதையை ஒப்பு நோக்கும் போது சைவ-வைஷ்ணவ ஒற்றுமையை உணரலாம். சைவசமயிகளின் பரம்பொருளான சிவபெருமானின் புதல்வன் முருகன். வைஷ்ணவர்களின் பரம்பொருளான விஷ்ணுவின் புதல்விகளாகவும் கொண்டாடப்பெறும் வள்ளி, தேவசேனா தேவியரைக் கல்யாணம் செய்தமை சமய ஒற்றுமை. தவிர முருகன் சிவகுமாரனே ஆகிலும் விஷ்ணு அம்சம் நிரம்பப் பெற்றவன்.

ஸ்ரீமந் நாராயணனின் அவதாரங்களில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளோடு அவனது ஒவ்வொரு செய்கையையும் இணைத்துப் பார்க்கும் போது ஏற்படும் இன்பமே தனியானது. அலாதியானது.



இதனை உண்மையிலேயே செயற்படுத்தியவர் சந்தக்கவி அருணகிரியார். திருப்புகழ் எங்கும் முருகன் பெருமை போலவே திருமால் பெருமையும் நிறைந்திருக்கிறது. தவிர, முருகனை அவர் "பெருமாள்" என்றே விளித்துப் பெருமை செய்திருக்கிறார்.

"காலமாய்க் காலமின்றிக் கருமமாய் கருமமின்றி
கோலமாய்க் கோலமின்றி குணங்களாய் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட்க்கு எல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண்டுற்றான்"

என்ற கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளின் திருவாக்கை மனங் கொண்டு அப்பெருமானின் திருவடிகளில் சரண்புகுவோம்.

முருகனுடைய ஆறுதிருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்தும். நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக்கங்களும் பார்த்து நிற்கும் இத்திருமுகங்களை நம்புவோருக்கு துன்பம் எத்திசையாலும் வாரா. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற்கென்றே பிறந்தன. அதனை,

"முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன் நான்காகும்
விழிகளில் அருளும் வேலும் வேறுள படையும் சீரும்
அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலரடியும்..."

என்று தெவிட்டாத தேனாகத் தமிழில் பாடுவார் கச்சியப்பர். கந்தபுராண காவிய ரசனையை உளத்தில் கொள்வோம். செம்மொழியான செந்தமிழின் தலைவன் முருகன். அவனடி பணிவோம். தமிழ் இந்து தர்மம் சிறக்கப் பிரார்த்திப்போம்.



தொண்டரடிப்பொடியன்




# தோற்றுவிட்டேன்....

நான் தோற்றுவிட்டேன்! அப்படி யென்றால் நான் வெல்ல வில்லை என்று அர்த்தமா? இல்லவே இல்லை! எது வெற்றி? நாம் எதிர்பார்த்தது கிடைத்தால் அது தான் வெற்றியாம்! இப்போது நான் எதிர்பார்த்தது தந்தையாக நான் தோற்பதைத் தானே! அப்போது தானே உறவினனாக நான் வெல்ல முடியும். தோற்றதனால் வென்றவர்கள் பலர். நானும் அதற்கு விதிவிலக்கல்ல!

என் சமூகத்தில் மீண்டும் எனக்கு மரியாதை கிடைக்கப்போகிறது. அண்ணன் மகளின் திருமணத்தில் நான் முன்னால் நின்று கருமங்கள் ஆற்றலாம்! யாரும் எனக்கு கேட்குமாறே என்னை நக்கலடிக்கமாட்டார்கள். கிண்டலடித்தாலும் திருப்பி பதிலடி கொடுக்க என்னால் முடியும். மூத்தவனால் போன மானம் இளையவனால் திரும்பக் கிடைக்கப் போகிறது.

ஆம்! கண்ணுக்கு கண்ணாக இரு சிங்கக் குட்டிகள் எனக்கு! மூத்தவன் எட்டடி பாய்ந்தால் இளையவன் பத்தடியாவது பாய்வான். ஆனால் அதே திசையில் தான் பாய்வான். மூத்தவன் விரும்பிப் படித்த பாடங்களையே இளையவனும் விரும்பிப் படித்தான். ஆனால் அவனை விட சற்றே மதிப்பெண்கள் அதிகமாக எடுப்பான் இளையவன்! மூத்தவன் நன்றாக சித்திரம் கீறுவான் என்றால் இளையவன் கீறிய சித்திரம் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்தது. விருப்பத்துடனேயே மூத்தவனின் பாதையில் மூத்தவனை விட அழுத்தமாகவே வெற்றி நடை போட்டான் இளையவன்! ஆனால் அண்ணன் தம்பி இருவருக்குள்ளும் நிறைந்திருந்த அன்பில் எள்ளளவும் எப்போதும் குறைந்ததே இல்லை.

மூத்தவன் மருத்துவபீடம் தெரிவானான். அங்கே கல்வியை மட்டுமல்ல காதலையும் கற்றான். காதலை கல்யாணத்தில் முடிக்க ஆசை கொண்டான். கேட்டான். விசாரித்தோம். வில்லங்கம் ஆரம்பமானது! அவனது காதலி சாதியில் குறைந்தவள்! காதலுக்கும் சாதிக்கும் எப்போதுமே பொருத்தம் இருந்ததில்லை. அதே சாதியில் காதலித்தவர்களை விட அடுத்த சாதியில் காதலித்தவர்கள்தான்

அதிகம்! சாதியை காதல் சாகடிக்கிறதா? காதலை சாதி சாகடிக்கிறதா என்கிற போட்டியில் பெரும்பாலும் வெல்வது சாதிதான்! பெற்றோர், உறவுகள், பாசம், கௌரவம் என்கிற பல சக்திகளுக்கு முன்னால் காதலின் சக்தி காலாவதியாகிப் போவதுதான் யதார்த்தம்!

ஆனால் என் மூத்தவன் மூர்க்கமாக காதலித்திருக்க வேண்டும். மணந்தால் அவள்தான் என்று ஒற்றைக்காலில் நின்றான். எனக்கு பாரதியைப் பிடிக்கும் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். அந்த பாரதியை வைத்தே என்னை ஊமையாக்கி விட்டான்.

சாதீயத்தை எதிர்ப்பவர்கள் குறைவு என்றால் உயர் சாதியில் இருந்து கொண்டே சாதீயத்தை எதிர்ப்பவர்கள் மிகக்குறைவு. அப்படிப்பட்டவர்களிலிருந்து பாரதி அப்பாற்பட்டவனாக காணப்பட்டான். அக்கிரகாரத்தில் இருந்து கொண்டே அக்கிரகாரத்தின் அக்கிரங்களை எதிர்ப்பது அவ்வளவு சுலபமல்ல. அவன் நினைத்திருந்தால் அந்தணர்களின் செல்லப்பிள்ளையாக, அரசின் ஆஸ்தான கவிஞனாக பேரோடும் புகழோடும் ஒரு ராஜ வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவன் சமூக விரோதியாக, தேசத்தின் தீவிரவாதியாக, ஊரோடு ஒத்துப் போகாமல், தர்மத்தில் இருந்து ஒதுங்கிப் போகாமல் கொண்ட கொள்கையிலிருந்து பிறள்வடையாத ஒரு சத்திய வாழ்க்கையை வாழ்ந்து, சரித்திரத்தில் நீங்கா இடம் பிடித்தான். இதற்காக அவன் இழந்தவை அதிகம். இந்த தைரியம் தான் அவனில் எனக்கு அதிகம் பிடித்தது. பாரதியை மூத்தவன் முன்னிலைப்படுத்தியதும் என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.

எங்கள் உறவுகள் எதிர்த்தார்கள். எங்கள் உடன் பிறந்தவர்கள் எதிர்த்தார்கள்.

“சாதிகள் இல்லையடி பாப்பா
குலத்துயர்ச்சி இகழ்ச்சி
சொல்லல் பாவம்”

என்று சிறுவயதில் சொல்லிக் கொடுத்து விட்டு இப்போது மாற்றிச் சொல்ல எங்களால் முடியவில்லை. எல்லோரையும்



மீறி திருமணம் செய்து வைத்தோம். காதல் கல்யாணம் என்பதால் பெரிதாக செய்ய முடியவில்லை. நெருக்கமானவர்களுக்கு மட்டுமே சொன்னோம். ஆனால் அவர்களும் பலர் வரவில்லை. எதிர்பார்த்தது தான். அதனாலேதான் வெளியூரில் திருமணத்தை ஏற்பாடு செய்தோம். பயணத்தூரம் என்பதால் பலரும் வரவில்லை என்று போலிக்காரணம் எமக்கு நாமே சொல்லிக்கொண்டோம்.

என் மூத்தவனின் திருமணத்தைத்தான் உறவுகள் புறக்கணித்ததாக நினைத்திருந்தேன். ஆனால் ஒட்டு மொத்தமாக எங்கள் குடும்பத்தையே புறக்கணிக்க தொடங்கி விட்டார்கள். யாரும் எங்களை ஆதரித்தால் அவர்களையும் புறக்கணிக்கத் தொடங்கினார்கள். இதனால் எங்களை ஆதரிப்பவர்களும் இல்லாமல்ப் போனார்கள். இவையெல்லாம் எப்படிப்பட்ட சூழ்ச்சிகள். இந்த மாயமான சதி வலைகளில் பின்னப்பட்டது தான் இந்த சமூக கட்டமைப்பு. மகனின் திருமண நாளிலிருந்து இன்றுவரை உறவினர்களின் எந்த ஒரு நல்லது கெட்டதுக்கும் எமக்கு அழைப்பில்லை. தகவல் அறிந்தால் மரண வீடுகளுக்கு அழையா விருந்தாளிகளாக சென்று விடுவேன். அங்கே இருக்கும் எந்த சடலத்திற்கும் என் சடலம் தெரிவதே இல்லை.

சொந்த ஊரில் எல்லோரும் இருந்தும் யாரும் இல்லாதது போன்ற வாழ்க்கை! கௌரவமாக தலை நிமிர்ந்து வாழ்ந்த நாங்கள் செய்யவே கூடாத குற்றம் செய்த குற்றவாளியைப் போல தலைகுனிந்து வாழ வேண்டிய நிலை. சாதி மாறிய கல்யாணத்திற்கு சம்மதித்தால் எங்களுக்கு நேர்ந்த கதிதான் நேரும் என்று எல்லோரையும் பயப்பட வைத்து சாதியை வளர்த்தது எங்கள் சமூகம்.

காதலை ஆதரித்தால் மானம் போகுமா? என்ன முட்டாள்த்தனம்? என்றெல்லாம் இனியும் நினைக்க முடியவில்லை. இழந்த கௌரவத்தை மீட்க வழியே இல்லையா? தெரிந்தவர்களிடம் தெரியாமல் கேட்டேன்.

”மூத்தவனால் விட்டதை சின்னவனை வைத்துப்பிடி” என்று தெரிந்து சொன்னார்கள்.

இதுவரை அவன் பாதைதான் இவன் பாதையும். அவன் கற்ற மருத்துவத்தைத்தான் சின்னவனும் கற்றுக் கொண்டிருக்கிறான்.

***அப்படியென்றால்...***
***காதலையும் கற்கத் தொடங்கிவிட்டானா?***

***விரைவே விடை....***
***விடையோடு அடுத்த இதழில் சந்திக்கிறேன்.***

***இப்படிக்கு,***
***அப்பா***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | |
| 6 | | | | 7 | | | |
| | | 8 | | | | | |
| 9 | | | | 10 | | | 11 |
| | | 12 | | | 13 | 14 | |
| | | | | 15 | | | |
| 16 | | | | 17 | | | |
| | | | | | | 18 | |




சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- காலங் கடந்து ஒரு பெருங் கவிஞனுக்கு வழங்கப்பட்ட அடைமொழி.
4- சோகமயமான ஓர் இராகம்
6- பூக்களை நாடி வருவது (குழம்பி)
7- உறக்கத்தில் வருவது (குழம்பி)
8- போக்குவரத்திற்கான அடிப்படைக் கண்டுபிடிப்பு (குழம்பி)
9- இடையில் நின்று காரியத்தை முடித்துக் கொடுத்தலை இப்படிச் சொல்வர்.
10- தகாத சொற்கள பேசுவது இது இருக்கக் காய் பறிப்பது போலாகும் என்கிறது குறள்.(திரும்பி)
12- கற்றவர்களே இது உடையவர்கள் என்கிறது இன்னொரு குறள்.(திரும்பி)
13- இடம் என்பதன் எதிர்ப்பதம்.
15- அறு சுவைகளில் ஒன்று
16- சொண்டினைக் குறிக்கும் சொல் (குழம்பி)
17- நோய் நிவாரணத்திற்காய் குடிப்பது (குழம்பி)
18- பசுமையான என்பதை குறிக்கும் அடைமொழி(குழம்பி)

## மேலிருந்து கீழ்

1- இராவணின் மனைவி
2- இராமன் புகுந்த இடம்
3- கர்ணனுடனே பிறந்தது
4- இப்போது அனைவரும் அணியவேண்டியது
5- பாடல் என்றும் சொல்லலாம்
7- இனிமையான குணம் (குழம்பி)
11- தாமரை மலரைக் குறிக்கும் ஒருசொல்
14- விவசாயிகளின் ஆயுதம் (குழம்பி)
15- ஓர் இராகம் (குழம்பி)
16- ஆபரணம் என்றும் சொல்லலாம்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 26 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | று | 2 ந் | 3 தொ | 4 கை | | 5 கா | 6 சி |
| றி | | 7 ஆ | ல் | ப | 8 ம் | | ள |
| ஞ் | | 9 தை | கா | | 10 ள | 11 ம | ம் |
| 12 சி | 13 லை | | 14 ப் | 15 ம் | க | ப | |
| | உ | | 16 பி | ம | த | ர | ர் |
| 17 மை | | 18 ஆ | ய | ர் | | ழ் | |
| 19 ம் | 20 க | க் | ழ் | த | | 21 சு | 22 ப |
| 23 பொ | தி | கை | | 24 அ | க | ரா | தி |

# குழந்தைகளில் ஏற்படும் கோவிட் பல்உறுப்பு அழற்சி நிலை

## ( Multisystem Infalmmatory Syndrome in Children - MIS-C )

வைத்தியர் கணேஷ்

பல்உறுப்பு அழற்சி நிலை (MIS-C) என்பது கொவிட்- 19 நோய்த் தொற்றுடன் தொடர்புடையதாக ஏற்படும் ஒரு கடுமையான நிலமையாகும். இதுவே கோவிட் ஏற்படும் குழந்தைகளில் மரணத்திற்கான பிரதான காரணமாக அமைகின்றது.

குழந்தைகளில் கொவிட்- 19 நோய்த் தொற்று தீவிரம் குறைந்ததாக காணப்பட்டாலும், பல்உறுப்பு அழற்சி நிலை (MIS-C) ஆனது அரிதாக ஏற்படலாம். ஆனால் அந்நிலை ஏற்படுமிடத்து அதி தீவிர சிக்கல் நிலமைகளை உருவாக்கும்.

இந்த நோய் நிலமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உடலில் இதயம், நுரையீரல், சிறுநீரகம், தோல் மற்றும் சமிபாட்டுத் தொகுதி போன்ற பல உறுப்புக்கள் அழற்சிக்கு உள்ளாகின்றன.

2020ம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம் பல உறுப்பு அழற்சி நிலை (MIS-C) பற்றிய அறிக்கைகள் உலகளாவிய ரீதியில் வெளியிடப்பட்ட போதிலும், இலங்கையில் அண்மையிலேயே இந் நோய் நிலை ஏற்பட்டுள்ளது. வட மாகாணத்திலும் கடந்த மாதங்களில் இந்நோய் நிலமை சிறுவர்களை பாதிக்க தொடங்கியுள்ளது.

சில குழந்தைகள் கொவிட்-19 நோயின் எந்தவொரு அறிகுறிகளையும் வெளிக்காட்டாது, பல்உறுப்பு அழற்சி (MIS-C) நிலையின் அறிகுறிகளை வெளிக்காட்டலாம்.

### பல் உறுப்பு அழற்சி நிலையின் (MIS-C) அறிகுறிகள்

- காய்ச்சல்
- வயிற்றுவலி
- வயிற்றோட்டம்
- கழுத்துவலி
- தோலில் ஏற்படும் மாற்றங்கள்.
- கண்கள் சிவத்தல், உதடு, நாக்கு சிவத்தல்
- வழக்கத்திற்கு மாறாக சோர்வு மற்றும் களைப்பு ஏற்படல்.



### அதிதீவிர நிலைக்கான அறிகுறிகள்

□சுவாசிப்பதில் சிரமம்
□மார்புப் பகுதியில் இறுக்கும் உணர்வு
□நித்திரையில் இருந்து விழிக்க இயலாமை
□வெளிறிய தோல்
□கடுமையான வயிற்றுவலி
□குருதி அமுக்கம் குறைவடைதல.
□வலிப்பு

### எதிர்பார்க்கப்படும் பரிசோதனை முடிவுகள்

□செங்குருதிச் சிறுதுணிக்கைகள் குறைவடைதல் (Reduced Haemoglobin)
□நிணநீர்குழியங்கள் குறைவடைதல் (Reduce lymphocyte count)
□நடுநிலைநாடிகள் அதிகரித்தல் (Increase Neutrophil counts)
□ESR, CRP, LDH, Ferritin ஆகிய பரிசோதனைகளில் பாரிய அதிகரிப்பு
□ஈரல் காட்டிகளில் எற்படும் மாற்றங்கள்
□இருதய காட்டிகளில் ஏற்படும் மாற்றங்கள் - Troponin I அதிகரிப்பு
□ எக்கோ (Echo) பரிசோதனையில் சில மாறுதல்கள்



### எவ்வாறு சிகிச்சையளிப்பது ???

1. தொடர்ச்சியான கவனிப்பு (Close monitoring)
2. IVIG எனப்படும் Immunoglobulin
3. Steroids
4. குருதிஉறையா மருந்து (Enoxaparin)
5. தொடர்ச்சியான அளவீடுகளும் கவனிப்புக்களும்



ஆகவே குழந்தைகளுடன் தொடர்புடையவர்கள் கோவிட் நோயால் பாதிக்கப்படும் போது குழந்தைகளையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி, குழந்தைகளுக்கான தொற்று இருக்கின்றதா என அறிய வேண்டும்.

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி ௨௮

## வந்தவர்கள் யார்?

கீழக்கரைத் துறைமுகத்தில், இருந்து வடக்கே "வத்தனூர்" என்கிற கிராமம். துறைமுகத்தில் பொருட்களை கப்பல்களில் இருந்து எடுத்துவரும் சிறிய சிறிய வத்தைகளை இங்கே அதிகம் செய்து கொடுப்பதனால் அந்தப் பெயர் வந்திருக்க வேண்டும்! வத்தைகளையும், மரக் கலங்களுக்கான, துடுப்புக்கள், பாய்மரக் கலங்களுக்கான கயிறுகள் போன்ற, கடலோடிகளுக்குத் தேவையான பாகங்களைச் செய்கிற மரத்தச்சர்கள் அந்த ஊரில் அதிகம் இருந்தனர்!

அந்த ஊரின் பிரதான சாலையின் ,இரு புறங்களிலும், மரவேலை செய்யும் பட்டறைகளும், கயிறு திரிக்கும் தொழில் செய்வோரின் வீடுகளுமாக நிறைந்து இருந்தது! உள்ளூர் கடலோடிகளும், வெளிநாடுகளைச் சேர்ந்த கடலோடிகளும், அவற்றை வாங்குவதற்காக அந்த ஊருக்கு அதிகம் சஞ்சரிப்பதனால். குதிரை வியாபாரமும் அங்கே ,இடம்பெற்றது! வெளிநாட்டவர்கள் தங்குவதற்கான சத்திரங்களும் அந்த ஊரின் எல்லைப் பகுதிகளில் இருந்தது. கீழக்கரை



துறைமுகத்தைப்போலவே, வத்தனூரும் எப்போதும் பரபரப்பாகவே இருந்தது!

முகலனும், மகாநாமரும், உத்தமரால், அந்த வத்தனூரில் ஒரு சிறிய சத்திரத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். சீலகாலனும், சில வீரர்களையும் தவிர, முகலனோடுவந்த அரச குடும்பத்தினர் அனைவரும், அந்த ஊரின் வேறுபகுதிகளில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். உத்தமர் அமைத்துக்கொண்டிருந்த சிவாலயம் அந்த ஊரில் இருந்து கூப்பிடு தொலைவில் கடற்கரையோரமாக இருந்தது! கண்டல் தாவரங்களும், முட்புதர்களும் நிறைந்த ஒரு ஒன்றையடிப்பாதைவழியாக அங்கே மிக விரைவில் போய்விடலாம்! அந்த ஒற்றையடிப்பாதையில், முகலனும் சீலகாலனும், கோயிலில் இருந்து மாலையில் புறப்பட்டு, தாங்கள் தங்கியிருக்கும் வீட்டைநோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்கள். முகலனை, அவனது தந்தையின் நினைவுகள் அதிகம் வருந்தியது!

"சீலரே, அனுராதபுரத்தின் காட்டு வழிகளில் என் தந்தை இப்படித்தான் என்னோடு நடந்து வருவார்! நான் பத்து வயதுப் பருவங்களில் இருக்கும்

போது, காட்டினைப் பற்றியும், இராசரட்டைப் பாண்டியர்களை வெல்வதற்காக, காடுகளில் எப்படி அரண் அமைத்து இருந்தார் என்பதையும் எனக்கு அடிக்கடி சொல்வார்! அவர் ஒரு மகாவீரர்! இன்று எம்மோடு இருந்திருந்தால், அவருடன் மீண்டும் அந்த அனுராதபுரத்துக் காட்டுப்பாதைகளில் நடந்து போயிருப்பேன்."

முகலனின் கண்கள் பனித்துப் போயிருந்தன!

"இளவரசே கலங்க வேண்டாம்! இறைவன் எண்ணியபடி தான் அனைத்தும் நடக்கிறது! உங்கள் தந்தையின் ஆத்மா உங்கள் உள்ளேயே இருந்து உங்களை வழி நடாத்தும்! மீண்டும் இலங்கையின் பேரரசனாக, மன்னர் தாதுசேனர் உங்கள் வடிவத்தில் முடிசூட்டும் நாள் வெகு தொலைவில் இல்லை!"

முகலனின் முதுகில் தன்கையை அழுத்தியவாறே சீலகாலன் நம்பிக்கை வார்த்தைகளை



விதைத்தான்! இப்போது முகலனுக்கு தேவையானதும் அது தானே!... முடியிழந்த மன்னனுக்கும் முடிவறியா நோயாளிக்கும், நல்ல மருந்து நம்பிக்கை தரவல்ல நல்ல வார்த்தைகளே, அதை மருத்துவம் கற்ற சீலகாலன் அறியாது போவானோ?

"சீலரே, இலங்கையின் அரியணை மீதில் எனக்கு பற்று ஏதும் இல்லை! அதை காசியப்பனைத் தவிர வேறு யார் வேண்டுமென்றாலும் ஆளட்டும்! என் தாய்நாட்டில் வாழக்கூடவா எனக்கு வாய்ப்பு இல்லை? கலாவாவியில் கால்நனைத்து, மாவலி நதியின் அழகை இரசித்து, அனுராதபுரத்தின் ஒரு குடிசையிலேனும் வாழ்ந்து விடவேண்டும்!"

முகலன் அரியணைக்கு ஆசை கொண்டவன் இல்லை என்பதை சீலகாலன் நன்கு அறிவான்! ஆனாலும் நாட்டை ஆளத்தகுதியானவனும் அவனே என்பதை மகாநாமர் நன்கு அறிவார் என்பதையும் அவன் அறிவான்!

"இளவரசே! மகாநாமரின் சிந்தனை களும் செயலும், மகத்துவம் வாய்ந்தவை! உங்கள் தந்தையை வழி நடாத்தியவர்! உங்களை இன்று வழி நடாத்துகின்றார்! நம்பிக்கை கொள்ளுங்கள்! நாளைகள் நல்ல படியே நகரும்!"

முகலனின் கலக்கம் முற்றுப்பெறாவிட்டாலும் கூட மட்டுப்பட்டது!

இருவரும் கதைத்தபடியே நடந்து வந்ததால் நேரம் போனது தெரியவில்லை! தூரத்தில் கடற் கரையில் துறைமுகத்தில் ஒலிக்கும் சங்கின் சத்தம் கேட்டது! இன்னும் சற்றுநேரத்தில் இருள் கவிந்து விடும்! மகாநாமரை காண்பதற்கு சிலர் வந்திருந்தார்கள்!

முகலனையும், சீலகாலனையும் அனுப்பிவிட்டு மகாநாமரும் உத்தமரும், பின்னால் வருவதாகச் சொல்லியிருந்தார்கள். வந்தவர்களை அருகில் இருந்த சத்திரத்தில் சீலகாலன் சேர்ப்பித்தான்! வந்திருந்த நால்வரில் ஒருவனை சீலகாலன் முன்னர்எப்போதோ பார்த்ததைப் போல ஒரு உள்ளுணர்வு சீலகாலனுக்குத் தோன்றியது! ஆனாலும், தன்னைச் சந்திக்க இன்று சிலர் வருவார்கள், அவர்களிடம் பேச்சுக்கொடுக்காமல் சத்திரத்தில் தங்கவைக்க வேண்டும் என்று மகாநாமர் முன்னரே அறிவுறுத்தியதால் சீலகாலன் ஏதும் வினவவில்லை!

சத்திரத்தின் பராமரிப்பாளனிடம், அவர்களுக்கு உணவுகொடுக்க, உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு பணித்தான். வந்தவர்களில் ஒருவன் ஒரு பெரிய மூட்டையை முதுகில் சுமந்து வந்திருந்தான். அதை எப்போதும் அவன் அருகிலேயே வைத்திருந்தான்! சீலகாலன் தான் முன்னர் பார்த்ததைப் போல் உள்ளுணர்வு பெற்றவனை, அடிக்கடி ஏற இறங்கப் பார்த்தான்! அவன் அதைக் கண்டுகொள்வதாக இல்லை!

முகலன் உடைகளை மாற்றிக் கொண்டு சத்திரத்துக்கு வந்து சேர்ந்ததும், சீலகாலன் உடை மாற்றுவதற்காக வீட்டுக்குப் புறப்பட்டான்! முகலனைக் கண்டதும் வந்த நால்வரும் எழுந்து வணங்கி நின்றனர். அப்போது கூட, அந்த மூட்டைக்காரன் அந்த மூட்டையை கைவிடுவதாக இல்லை!

“வரவேண்டும்! பாட்டனார், சொல்லிய நால்வரும் நீங்கள் தானே…?”

“ஆமாம் இளவரசே! மகா நாமரின் வரவை எண்ணிக் காத்திருக்கின்றோம்.”

“பாட்டனார் சற்றுநேரத்தில் வந்துவிடுவார். பசியாறி இளை ப்பாறுங்கள்”

என்ற முகலன் அவர்களிடம் விடைபெற்று சத்திரத்தின் வாசலுக்கு வந்தான்! மகாநாமர் தூரத்தில் வந்துகொண்டிருக்க வேண்டும். அந்த ஒற்றையடிப்பாதையில் தூரத்தே இரண்டு கைப்பந்தங்கள் தெரிந்தன. அவர்களின் வரவை எதிர்பார்த்தபடி நின்ற முகலனின் காலடியில் “தொப்” என்னு ஒரு மனிதத் தலை வந்து விழுந்தது!

வருவார்கள்…

## ஈழச் சூழலியல் 17

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

### விவசாயத்தின் நிலை

விவசாயம் நமது நாட்டின் முதுகெலும்பு என்கின்றோம். அதனால்தானோ என்னவோ யாரும் திரும்பி பார்க்க முடியாத துறையாக விவசாயத்துறை காணப்படுகின்றது.

உலளாவிய ரீதியில் பெரும் அச்சத்தை உண்டுபண்ணுகின்ற காலநிலை மாற்றத்தால் முதலில் பாதிப்புறுகின்ற தரப்பாக விவசாய சமூகம் காணப்படுகின்றது. அரசின் பொருளாதார கொள்கைகள், வரி நடைமுறைகள் என பல்வேறு தரப்பட்ட நெருக்குவாரங்களுக்கு உள்ளாகின்ற தரப்பாகவும் விவசாய சமூகமே காணப்படுகின்றது. இந் நிலை இவ்வாறாகவே தொடருமாக இருந்தால் காலப்போக்கில் விவசாயம் செய்ய ஆட்களை தேடுகின்ற நிலை நிச்சயம் ஏற்படும். பெயரளவில் புதுப்புது திட்டங்களை விவசாயத்துறை சார்ந்து நடைமுறைப்படுத்தினாலும் அவை முறையாக விவசாயிகளை சென்றடைகின்றதா? அவர்களுக்கு உரிய விதத்தில் குறித்த திட்டங்கள் பலன் தருகின்றதா என்ற பெரும் வினா தொக்கி நிற்கின்றது.



FAO (Food and Agriculture Organization) உடைய தரவுகளின் படி எமது நாட்டில் 33.7% வேலைவாய்ப்பு விவசாயத் துறையில் நேரடியாக தங்கியுள்ளன. இதில் நாம் உற்பத்தி செய்கின்ற விவசாயப் பட்டதாரிகள் விவசாயத் துறையில் பணியாற்றுகின்றார்களா?அதற்குரிய வழிவகைப் பொறிமுறை இருக் கின்றதா? என்ற கேள்வியும் எம்மில் எழாமல் இல்லை. எமது நாட்டின் நிலப்பரப்பில் 41.8% அளவான நிலப்பரப்பு விவசாயத்துறைக்கு பயன்படுத்தப்படுவதாகவும், நாட்டின் மொத்த GDPயின் 8%க்கும் அதிகளாவான வருமானப்பங்குதாரராக விவசாயத் துறை காணப்படுவதாகவும் FAO அறிக்கை கூறுகின்றது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதுகாப்பது நாட்டின் முதற் கடமையாக அமைதல் வேண்டும். அந்த வகையில் தற்போதைய அரசாங்கத்தினால் புதிதாக நடை முறைப்படுத்தப்பட்டுள்ள அசேதன பசளைகள் தொடர்பான திடீர் தடை விவசாய பெருமக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும்



அதிருப்தியையயும் ஏற்படுத்தி உள்ளது. 1960களின் பின்னான காலப்பகுதிகளிலிந்தே அசேதன உரப்பாவனைகளுக்கு பழக்கப்பட்டு போன விவசாயிகளை ஒரு இரவுக்குள் இயற்கை விவசாயம்/ சேதன விவசாயத்துக்கு திரும்புங்கள் என்பது பொருத்தப்பாடான அல்லது நடைமுறைச் சாத்தியமான விடைய மில்லை.

நிச்சயமாக சூழலை நேசிக்கின்ற எந்தவொரு நபரும் சேதன விவசாயத்தை விரும்புவார். ஆனால் அத்திட்டங்களை நடை முறைப்படுத்தல் என்பது நீண்ட படிமுறையாக்கல் செயற்பாட்டினூ டாக மேற்கொள்ளப்பட வேண்டும். எந்த விவசாயியும் நாட்டின் செல்வந்தர்கள் பட்டியலில் முன்னி



லையில் இல்லை. எனவேதான் விவசாயினுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவர்களின் சிந்தனைப் புள்ளியிலிருந்து யதார்த்த நடைமுறைகளுாடாக திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்க டியினால் 1500 ரூபாவாக இருந்த அசேதன உரம் கறுப்புச்சந்தையில் 10000 ரூபாவாக விற்பானையாகின்றது. மாற்றாக சேதன உரம் என்றால் 35000 ரூபாவுக்கு கனரக வாகனத்தில் பறிக்கப்பட்ட எரு தற்போது 70000 ரூபா ஆக விற்பனையாகிறது. எனவே



பாதிப்பு யார் சார்ந்தது என்பது நமக்கு தற்போது புரிந்திருக்கும். பாமர விவசாயி தனது உற்பத்தியினை விலை ஏற்றப்போக்கில் விற்பனை செய்ய வழி இருக்கின்றதா என்றால் நிச்சயம் இல்லை என்பதே பதிலாகும்.

இவ்வாறு நிலைமைகள் இருக்க அறிவியல் யதார்த்தக்கண்ணோடு அப்பிரச்சினையை அணுகினால் நாகரிக வளர்ச்சி, நவீன தொழில்நுட்பம், உலகமயமாக்கல்



போன்றன விவசாய மண்ணை உயிர்ப்போடும் அடுத்த தலை முறைக்கு உதவும் வகையிலும் பேணி பாதுகாத்து வருவதிலிருந்து தவறி விட்டது. இதன் காரணமாக இன்று உலகின் பல பாகங்களிலும் மண் வளம் பாதிக்கப்பட்டு வருகின்றது. 2015 ஆம் ஆண்டின் உலக மண் வள பாதுகாப்பு அறிக்கைகளின் பிரகாரம் சூழல் பாதிப்பில் பிரதான இடத்தை மண் மாசடைதல் பெற்றுள்ளது. இது நேரடியாக மனிதனின் உணவில் தாக்கம் செலுத்தக் கூடியதாகும்.

மண் மாசுறுதலில் பிரதான இடத்தை இரசாயன களை நாசினிகள் பெறுகின்றன. இன்று நவீன விவசாய நடவடிக்கைகளில் முக்கிய இடத்தை அதிக வீரியம் கொண்ட இராசாய களை நாசினிகள் பிடித்துள்ளன. தொடர்ச்சியான இரசாயன களை நாசினிகளின் பாவனையே விவசாய மண்ணை மலடாக்கியுள்ளதாக உலகின் பெரிய விவசாய நாடுகளில் ஒன்றான இந்தியாவைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகின்றனர். அந்த வகையில் மிகச்சிறிய விவசாய நாடான இலங்கையும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. மண் வளம் பாதிக்கப்பட்ட பிரதான நாடாக தெற்காசியாவில் இலங்கை விளங்குவதாக உள்ளூர் ஆராய்ச்சியாளர்களே உறுதி செய்துள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளுக்கு அதிக பொசுபேட் மற்றும் ஆர்சனிக் கலந்த இரசாயன உரங்களை பயன்படுத்தி வருவதால் நாட்டின் வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சின் தகவல்களின் படி இவ்வகை சிறுநீரக நோயால் (Chronic Kidney Disease) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,479 ஆகும். இரசாயன களை நாசினிகள் விளை நிலங்களில் ஊடுருவப்பட்டு நீரில் கலப்பதால் அந்நீரை அருந்துபவர்களுக்கு இத்தாக்கம் அதிகம் என்கின்றது ஆய்வு. அதிர்ச்சி தரும் வகையில் அடுத்த ஆண்டே (2015) இந்த எண்ணிக்கை 20,828 ஆக அதிகரித்தது மட்டுமன்றி இலங்கையில் மாதமொன்றுக்கு பார்வை குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 30 ஆக உள்ளதாகவும் சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய்களின் தாக்கம்






எப்போதுமில்லாது அதிகரித்து வருவதாகவும் மருத்துவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவை அனைத்துக்கும் தீர்வாகவே திடீரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கடந்த வாரம் இரசாயன களை நாசினி இறக்குமதிக்கு தடை விதித்துள்ளார். அதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட காரணங்களை முன்வைத்து அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவு வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இது எந்தளவுக்கு நடைமுறைக்கு சாத்தியப்படப்போகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்தியாவானது தற்போது இரசாயனமற்ற இயற்கை உரங்களை பயன்படுத்த ஆரம்பித்து விட்டது. அதற்கான சகல வளங்களும் அங்குள்ளன. இலங்கையில் அவ்வாறில்லை. மேலும் இந்த திடீர் மாற்றங்களுக்கு விவசாயிகள் பழகி வருவதை விட, இத்தனை நாட்களாக இராசாயன உரங்களுக்குப் பழகிப்போன எமது நாட்டின் மண் மற்றும் கலப்பின பயிர் விதைகள் அதற்கேற்றவாறு தமது தன்மையை பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையிலிருந்து உள்ளூர் பயன்பாட்டுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் தாவர உணவுப்பொருட்கள் வரை இதில் தாக்கம் செலுத்துகின்றன.

இந்த அனைத்துத் தரப்பினரையும் ஈடு செய்யக்கூடிய இயற்கை சேதன உரங்கள் பயன்பாட்டில் இருக்கின்றனவா , இதற்கு முன்பு பெற்ற விளைச்சளை இதன் மூலம் பெற முடியுமா, இரசாயன களை நாசினி வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், அவற்றை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் நிறுவனங்கள் இத்துறையோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்திருக்கும் இலட்சக்கணக்கானோரின் எதிர் காலம் குறித்து அரசாங்கம் யோசித்து தான் இந்த முடிவை எடுத்ததா போன்ற பல கேள்விகள் எழுகின்றன...




ஆராய்வோம்...




# புதிர் 09
# காலத்தை வகுப்பவனே அரசன்

சினமிகா




மீண்டும் காட்டின் வழியே வேதாளத்தை விக்ரமாதித்தன் சுமந்து வந்து கொண்டிருந்த போது, அந்த வேதாளம் அவனிடம் இந்த கதையை கூறியது.

சொர்ணபுரி என்ற நாட்டை மன்னன் வீரபாகு சீரும் சிறப்புமாக ஆண்டுவந்தான். ஆனால் அவனுக்கு வாரிசு இல்லை. தனக்கு பிறகு தன் நாட்டை ஆள வாரிசு இல்லையே என்று கவலை கொண்ட மன்னன், வீரமும் அறிவாற்றலும் மிக்க ஒருவன் தன் காலத்திற்கு பிறகு இந்த நாட்டை ஆளவேண்டும் என எண்ணினான். இதை பற்றி தனது மந்திரியிடம் ஆலோசித்தான். அப்போது இந்நாட்டின் எல்லையில் இருக்கும் ஆச்சிரமத்தில் ஒரு துறவி, இளைஞர்களுக்கு வீரக்கலைகளை கற்றுத்தந்து, அவர்களை மிகச் சிறந்த வீரர்களாக்குவதாகவும், அங்கு சென்று பார்த்தால் இந்நாட்டை ஆளும் தகுதியுடைய நபர் கிடைக்க வாய்ப்புள்ளது என்று கூறினார்.

அதன் படி மன்னன் வீரபாகுவும், அவன் மந்திரியும் அந்த ஆச்சிரமம் சென்று தங்களின் எண்ணத்தை அந்த துறவியிடம் கூறினர். இதை கேட்ட அந்த துறவி, தான் அவர்களுக்கு உதவுவதாக கூறி, தனது ஆச்சிரமத்தின் மிகச் சிறந்த வீரர்களான ராமன், ஜெயன், கௌதமன் என்ற மூவரை அழைத்து, ஆளுக்கு ஒரு திசையில் பயணிக்குமாறும், ஒரு மாதத்திற்கு பிறகு இந்த ஆச்சிரமத்திற்கு திரும்பி வந்து தங்களின் அனுபவத்தை கூற வேண்டும் என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

ஒரு மாதத்திற்கு பிறகு அந்த மூவரும் ஆச்சிரமத்திற்கு திரும்பினர். அங்கு மன்னன் வீரபாகுவும் அவனது மந்திரியும் அந்த துறவியுடன் இருந்தனர். அப்போது ராமன், தான் வடதிசை நோக்கி பயணித்ததாகவும், அப்போது ஒரு நாட்டின் மன்னனுக்கு எதிராக சில இளைஞர்கள் ஒருவனின் வழிகாட்டுதலின் படி புரட்சியில் ஈடுபட, காட்டின் மறைவான இடத்தில் ஆயுத பயிற்சி மேற்கொண்டிருந்ததாகவும், எனவே அக்கூட்டத்தின் தலைவனை தான் அம்பெய்தி கொன்று விட்டதாகவும் கூறினான்.




இப்போது ஜெயன், தான் தென் திசையை நோக்கி பயணித்ததாகவும், அந்த திசையின் பல இடங்களில் கொள்ளையர்களின் அட்டகாசங்கள் அதிகமிருந்ததால் அங்குள்ள இளைஞர்களுக்கு, தான் வாள் போர் கலையை கற்றுத்தந்து அவர்கள் தங்களை தற்காத்து கொள்ள தான் உதவியதாக கூறினான்.

மூன்றாவதாக கௌதமன், தான் கிழக்கு திசையை நோக்கி பயணித்ததாகவும், வழியில் காட்டின் ஓரத்திலுள்ள ஒரு குளத்தில் ஒரு யானை சிக்கி தவித்ததைக் கண்டு, யானையை மீட்டு அதன் கூட்டத்தில் சேர்த்ததாகவும் கூறினான்.

இதையெல்லாம் கேட்ட வீரபாகுவும், அவன் மந்திரியும் வீரம் நிறைந்த இவர்களில் யாரை தங்கள் வாரிசாக தேர்ந்தெடுப்பதென குழப்பம் கொண்டனர். சிறிது நேரம் ஆலோசித்த பின்பு அவர்களின் அறிவாற்றலின் அடிப்படையில் வாரிசை தேர்ந்தெடுக்கும் படி கூறினார் அந்த துறவி.

இக் கடிகாரத்தின் முகத்தில் இரண்டு நேர் கோடுகளை வரைய வேண்டும் எவ்வாறெனில், இரண்டு நேர்கோடுகளால் கடிகாரத்தில் உள்ள இலக்கங்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுவதுடன் அம் மூன்று பிரிவுகளிலுமுள்ள நான்கு எண்களின் கூட்டுத்தொகையும் சமனானதாக இருக்க வேண்டும்.இதனை முதலில் தீர்ப்பவரை தமது வாரிசாக தேர்ந்தெடுக்கலாமென ஆலோசித்தனர்.

விக்ரமாதித்தனே நீர் இதற்கான பதிலை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் பதிலளிக்காவிடின் உமது தலை சுக்குநூறாக உடைந்து விடும் என்று கூறி முடித்தது வேதாளம்.

தூமி அன்பர்களே மன்னர் சரியான பதிலழிக்க நீங்கள் உதவிடுங்கள். உமது பதிலை எமது மின்னிதழிற்கு அனுப்பி வையுங்கள்.

**புதிர் 08 - விடைகள்**

$$\begin{array}{r} 17 \\ \times\ 4 \\ \hline 68 \\ +25 \\ \hline 93 \end{array}$$

# பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்
## [Cleft Lip and palate]

சஜீவன் சத்தியசீலன்
பல்மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

### தாய்ப்பாலின் முக்கியத்துவம்

-பிறந்ததிலிருந்து 6 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே உங்கள் குழந்தையின் ஒரே உணவு.

-வேறு வகையான பால் கொடுப்பதாயின் அது வைத்தியரின் சிபாரிசுடன் மட்டுமே கொடுக்க வேண்டும். அவ்வாறு போ(க)ர்முலா பால் கொடுப்பதாயின் அதனை அளந்து கொடுத்தல் வேண்டும்.

-குழந்தைக்கு மிகச் சிறந்த உணவு தாய்ப்பாலாகும். தாய்ப்பாலினை எவ்வளவு ஊட்ட முடியுமோ அவ்வளவு ஊட்டுங்கள்.


-தாய்ப்பால் குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள பிணைப்பை அதிகரிக்கின்றது

-தாயின் உணவுகளில் மீன், முட்டை, இறைச்சி, பழங்கள் போன்றவற்றை சேர்த்துக்கொள்வதினால் தாய்ப் பாலின் அளவு அதிகரிக்கும்.

-உதட்டினை சீர் செய்யும் சிகிச்சைக்கு குறைந்தது 10 pounds நிறை அடைய வேண்டும் என்பதனால் வாராந்தம் குழந்தையின் நிறையினை அளத்தல் வேண்டும். சராசரியாக 150g எடை வாராந்தம் அதிகரிக்க வேண்டும்.

### பிளவுபட்ட உதடு மட்டும் உள்ள குழந்தைக்கு எவ்வாறு பால் ஊட்டுவது?

பிளவுபட்ட உதட்டுடன் பிறந்த குழந்தைக்கு சாதாரண குழந்தைகளுக்கு பால் ஊட்டுவது போல் ஊட்டமுடியும். பிளவின் அளவினை பொறுத்து சில சமயங்களில் உதவிகள் தேவைப்படும். குழந்தையின் உதட்டினை அதன் பிளவுக்கு ஏற்ப தாயின் முலையினுள் பொருந்தும் படி குழந்தையின் நிலையினை மாற்றுதல் வேண்டும். உறிஞ்சும் போது காற்று உள்ளே போகுமாயின் சத்தம் ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் குழந்தையின் நிலையினை மாற்றி சத்தம் வராதது போல் பாத்துக்கொள்ள வேண்டும். குழந்தையினை படத்தில் [படம் 1] உள்ளவாறு நிமிர்த்தி பிடித்துக்கொள்வதினால் மூச்சுத்திணறல் ஏற்படுவதினை தடுக்க முடியும்.



படம் 1

## பிளவு பட்ட உதடு மற்றும் அண்ணத்துடன் பிறந்த குழந்தைக்கு பால் ஊட்டும் முறை

அண்ணத்தின் பிளவு சிறிதாக இருக்குமாயின் குழந்தைகள் சாதாரணமாக உறிஞ்சிக் குடிக்க முடியும். முலை காம்பினை அந்த பிளவில் வைத்து பால் ஊட்டுவதினால் குழந்தை நாக்கின் உதவியுடன் பாலினை உறிஞ்சி குடிக்க முடியும். பாலினை உறிஞ்சி குடிக்க முடியாவிட்டால் தாய்ப்பாலினை படத்தில் [படம் 2] உள்ள போன்ற பால் புட்டிகளின் மூலம் ஊட்டலாம். பால் ஊட்டும் முறைகளை நிபுணர் குழுவிடம் கேட்டு அதற்கான அறிவுரைகளை பெற்றுக்கொள்ளலாம்.

படம் 2



## பால் புட்டியினால் பால் ஊட்டுதல்

பால் புட்டியினால் பால் ஊட்டும் பொழுது குழந்தையினை படத்தில் காட்டியவாறு வைத்திருக்க வேண்டும்

-தாய்ப்பாலினை தவிர வேறு பால் கொடுப்பதாயின் வைத்தியரின் சிபாரிசு இல்லாமல் கொடுக்க வேண்டாம்.

- நாள் ஒன்றுக்கு சாதாரண குழந்தைகளுக்கு கொடுக்கும் அளவிலேயே இந்த குழந்தைகளுக்கும் பால் கொடுக்க முடியும்.

-பால் ஊட்டும் பொழுது 30-40 நிமிடங்களுக்கு மேலே எடுக்குமாயின் உறிஞ்சுதல் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை காட்டும். அவ்வாறு நேரம் எடுக்குமாயின் விசேட சூப்பியினை பாவியுங்கள்.


## சாதாரண சூப்பியினை சரி செய்தல்

ஒரு சூடான ஊசியினால் அல்லது கத்தியினால் சூப்பியின் துளையினை பெரிதாக்கலாம். இதன் மூலம் பால் வெளிவருவது அதிகமாகும்.[படம் 3]

## உணவு ஊட்டுதல்

பிறந்தது முதல் 6 மாதம் வரையில் தாய்ப்பால் ஊட்டுதல் முக்கியமானது. அதன் பின்பு படிப்படியாக குறைத்து மற்ற உணவுகளை ஊட்டத் தொடங்க வேண்டும். எனினும் பிளவுடன் பிறந்த குழந்தைக்கு எப்பொழுது எந்த உணவு ஊட்டுவது என்பது பற்றி நிபுணர் குழுவுடன் ஆலோசிக்கவும்.

படம் 3



சோற்றுடன் மசித்த மரக்கறி, கிழங்கு வகை, பருப்பு வகை, ஊண் உணவு போன்றவற்றை தயாரித்து உணவு ஊட்ட முடியும். ஊட்டப்படும் உணவு வகையும் அளவும் பற்றி ஆலோசனைக் குழுவிடம் கேட்டு அறியலாம்.

உங்கள் குழந்தையின் உணவினை தயாரிக்கும் முன்பும் கையாளும் பொழுதும் சவர்க்காரம் இட்டு கையினை நன்றாக கழுவுதல் வேண்டும். தாய்ப்பால் தவிர வேறு பால் வகைகளை புட்டியினில் கொடுப்பதாயின் நன்கு கிருமி நீக்கிய பின்பே பருக்க வேண்டும். [படம் 4]

படம் 4



புட்டிகளையும் மற்ற பகுதிகளையும் ஒரு சட்டியில் இட்டு தண்ணீரால் முற்றாக நிரப்பி கொதிக்க வைக்கவும்.

# குட்டிக் கதை

நான் சினிமாவில் புகழின் உச்சியில் இருந்தப் போது ஒருமுறை அமெரிக்காவில் இருந்து, நான் பிறந்த லண்டன் மாநகருக்கு சென்றேன்..

நான் இளமையில் பசியுடன்,கிழிந்த சட்டையுடன்.. நடந்து சென்ற அந்த இலண்டன் வீதி தெருக்களில் தான் இப்போது.. என்னை காண இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டனர்..

ஆனால் நான் பிச்சைகாரனாய் இருந்த போது என்னை நேசித்த என் காதலியை தேடினேன்.. அவள் இல்லை.. அன்று வறுமை எங்களை பிரித்தது.. இன்று திரையில் என்னை இலட்சக்கணக்கில் கண்கள் காண்கின்றன..

நான் தேடுவதெல்லாம் வீதிகளில் ஏழையாய் நடந்து சென்ற போது என்னை ஜன்னல் வழியாக பார்த்து சிரித்த அந்த கண்களை தான்...

பணம் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கலாம், ஆனால் வறுமை நம்மிடம் இருந்து பறித்த சிலவற்றை பணத்தால் திருப்பி தர முடியாது... இப்போதும் வறுமை தான் வென்றது...!!

*~சார்லி சாப்லின்..*

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில்

# கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

முருகையா சதீஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

4

## நிகழ்ச்சிப் போக்குகளை முன்பே கோடிட்டுக்காட்டுதல்

கமலாம்பாள் சரித்திரத்தில் பல நிகழ்ச்சிப் போக்குகளை முன்பே ராஜமய்யர் கோடிட்டுக்காட்டுகிறார். ஆருத்ரா தரிசன நாளை, குழந்தையை முத்துஸ்வாமி ஐயர் பறிகொடுத்த நாளாகவும், பின் அவர் தான் தற்கொலை செய்ய முயலும் நாளாகவும் காட்டுதல் இங்கு முக்கியமானதாகும். இதில் பழைய ஆருத்ரா தரிசன நாளின் நினைவே மீண்டும் வருகிறது. இவ்வாறு பல நயமான பகுதிகளால் நாவலை அமைத்துள்ளார். புதுமைப்பித்தன் சொல்வதுபோல் "கமலாம்பாள் சரித்திரம்" முற்பகுதி - நாவல், பிற்பகுதி - கனவு என்ற பெரும் அமைப்பில் அமைந்துள்ளது.

## பாத்திரப்படைப்புக்கள் மூலம் அக்காலச் சமூகத்தைக் காட்டுதல்

"நல்ல நாவல்களின் அடிப்படையே பாத்திரப்படைப்புத்தான்" என்ற கூற்றினை இந்நாவலில் வரும் பாத்திரப்படைப்புக்கள் உறுதி செய்கின்றன. கதை எழுந்த காலத்தில் தமிழ்நாட்டில் நற்குணம் பொருந்திய குடும்பப் பெண்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு "கமலாம்பாள்" என்னும் பாத்திரமாகும். முத்துஸ்வாமி ஐயரின் வாழ்க்கைச்சரித்திரத்தினூடாக அக்காலத்தில் நிலவிய பிராமணிய சமூக நடைமுறைகளை விளக்கிச் சொல்வதற்கு இவள் உற்ற துணையாகிறாள். நிலமானிய சமூகத்தில் கூட்டுக் குடும்பப் பெண்கள் அந்த உறவு நிலையைத் தக்க வைத்துக்கொள்ளப் பாடுபட்டமையை கமலாம்பாளூடாக ராஜமய்யர் காட்சிப்படுத்துகின்றார்.

நிலச்சுவாந்தார்களின் குடும்ப அமைப்பு, நிலமானிய சமூக வீழ்ச்சி, கூட்டுக்குடும்பச் சிதைவு, நிலச்சுவான்தார்களுக்கு சமூகத்தில் இருந்த மதிப்பு முதலியவற்றை விளக்குவதில் முத்துஸ்வாமி ஐயர் செல்வாக்குச் செலுத்துகின்றார். "பெண்களுக்கே கலகம்தான் தொழில் - இப்படித்தான் கோளும் புரலியும் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்" என்று கூறுவதன் மூலம் அக்காலப் பெண்களின் நிலையை இப்பாத்திரம் மூலம் ராஜமய்யர் நிரூபிக்கின்றார். மேலும், கதை எழுந்த காலத்தின் கல்விநிலை, மாணவர்களின் மனநிலை, பால்ய விவாகம், திருமணம், களியாட்டங்கள் முதலிய நிகழ்வுகளுக்குச் சமூகத்தில் நிலவிய செல்வாக்கு, ஆசிரிய - மாணவ உறவுநிலை முதலிய பல விடயங்கள் ஸ்ரீநிவாசன் எனும் பாத்திரம் மூலம்

ராஜமய்யர் வெளிக்காட்டுகின்றார். “பெண்களே கெட்டவர்கள்” என்ற முத்துஸ்வாமி ஐயரின் கருத்தை உறுதிப்படுத்துபவளாகப் பொன்னம்மாள் படைக்கப்பட்டுள்ளாள். அக்காலத் தமிழ்ப் பண்டிதர்களின் நிலைமை அம்மையப்பிள்ளை எனும் பாத்திரம் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும், சுப்பு எனும் பாத்திரத்தின் மூலம் அக்காலச் சமூகப் பெண்களின் முக்கிய செயலான “வம்பளத்தல்”, “கோள்மூட்டுதல்” முதலிய செயற்பாடுகள் இவளூடாக விபரிக்கப்படுகின்றன. எனவே ராஜமய்யர் தான் வாழ்ந்த காலத்தில், தான் கண்ட அனுபவங்களை, அக்காலச் சமூகநடைமுறைகளைக்காட்ட அதற்கேற்ற வகைமாதிரியான பாத்திரங்களைப் படைத்து அக்காலச் சமூகத்தைக் காட்டுவதில் வெற்றிபெற்றுள்ளார்.




## நாவலின் தொடக்கம்

அவசரமில்லாத நிதானத்துடன் “கமலாம்பாள் சரித்திரம்” ஆரம்பிக்கின்றது. “மதுரை ஜில்லாவில் சிறுகுளம் என்ற ஒரு கிராமம் உண்டு. அந்தக் கிராமத்தின் நடுத்தெருவின் மத்தியில் “பெரிய வீடு” என்ற பெயருள்ள ஒரு வீடு இருந்தது.” என்று ஆரம்பிக்கின்றது. முத்துஸ்வாமிஐயர் தன் மனைவியுடன் உரையாடுவதும், தன்பிள்ளை கல்யாணியின் திருமணப் பேச்சை எடுக்க, அவரது தம்பியின் பையன் மூலம் வாத்தியார் அழைத்துவரப் படுவதுடன் முதல் அத்தியாயம் முடிகின்றது. சற்றுப் பெரிய பரந்த விஸ்தாரத்தைக் காட்டி மெதுவாய்க் கதைக்குள் புகுவது ராஜமய்யரின் இயல்பாக உள்ளது.

## நாவலின் முடிவு

அடுக்கடுக்கான துயரச் சம்பவங்கள் பிற்பகுதியில், கதைத்தன்மையுடன் திருப்பங்களாய் நிகழ்ந்தாலும் முடிவென்ற தெளிவை நெருங்குகின்ற ஆசிரியரின் பரவசமும், ஞானமும், தீவிரமும், எழுத்து வன்மையும் பிரமிக்கத் தக்க அளவில் காணப்படுகின்றன. அந்த உணர்வு சாதாரண யதார்த்த வட்டத்திலிருந்து கூரிய ஓர் ஆன்மீக வட்டதிற்குள் வாசகனை இழுக்கிறது. நாவலின் முடிவிலே வேதாந்தப் பக்திச் சிந்தனைகள் சற்று அதிகமாகவே இருப்பது போலக்காணப்பட்டாலும், அந்தச் சிந்தனைகளும், விபரங்களும் கமலாம்பாள் சரித்திரத்திற்கு ஓர் ஆழத்தைத் தருகின்றன. எனவே நாவலின் பிற்பகுதி இவரது வேதாந்தக் கருத்துக்களின் பிரதிபலிப்பாகவே உள்ளது. இதனால் இந்நாவலின் பிற்பகுதியைக் கனவு எனக் கூறுவோரும் உளர். இவரின் ஞான மார்க்கச் சிந்தனையும், ஆத்மீக நாட்டமும் நாவலின் பிற்பகுதியைக் கனவுபோல மாற்றிவிட்டன எனலாம்.

ஆய்வு தொடரும்...

30



# சித்திராங்கதா

காவ்யமோகன்

## அடுத்த திட்டம்

பறங்கியனின் கூடார வாயிலிலே காவல்வீரன் கால்சராயும் தொப்பியும் அணிந்து கையில் நீண்ட ஈட்டியுடன் காவல் இருந்தான். உக்கிரசேனன் வந்திருந்த செய்தியினை உள்ளே சென்று அந்நிய சிப்பாய்க்குரிய முறையில் ஒலிவேராவை வணங்கி அறியப்படுத்தினான். அனுமதி வந்ததும் உக்கிரசேனன் உள்ளே சென்றான்.

“வா! வா! உக்கிரசேனா... பரவாயில்லையே! உரிய நேரத்தில் நான் இருக்கும் இடத்தை அறிந்து வந்துவிட்டாயே. உன் விடயத்தில் நானும் கொஞ்சம் அவதானத்துடன் தான் இருக்க வேண்டும்.”

என்று கூறி மேலுஞ் சிரித்தான் வன்னியத்தேவன்.

“யார் இவன் வன்னியத்தேவரே இவனிடம் நீங்கள் ஏன் அவதானமாக இருக்க வேண்டும்?”

என்று குழப்பமான முகத்துடன் கேட்டான் ஒலிவேரா.

“இவன் தான் உக்கிரசேனன். என் நம்பிக்கைக்குரிய தூதுவன். வன்னி அரச ஒற்றன்.”

என்று கூறியபடியே உக்கிரசேனனை நோக்கி

“கூறு உக்கிரசேனா, ஏதோ அவசர செய்தியுடன் தானே என்னை இங்கு வரை தேடி வந்துவிட்டாய். முதலில் அச்செய்தியைக் கூறு”

“பிரபு, யாழ்வேந்தர் வன்னியர் விழா பற்றிய அறிவிப்பை விடுத்திருக்கிறார். அவசரமாக நிகழ்த்தப் போகிறாராம்.”

அதைக்கேட்ட வன்னியத்தேவனது முகத்திலிருந்த சிரிப்பு மெல்ல மறையத் தொடங்கியது.

“என்ன வன்னியர் விழாவா? அதற்கு என்ன அவசியம் வாய்த்தது இப்போது? சங்கலியன் புதியாய் ஏதும் சதித்திட்டம் தீட்டுகிறானோ? இருக்கட்டும்.”

வன்னியர் விழா குறித்து வன்னியத்தேவன் ஏற்கனவே அறிந்திராதது உக்கிரசேனனிற்கு ஆச்சரியத்தை அளித்தது. சித்திரை முழுநிலவு நாள் குறித்து வன்னியத்தேவன் ஏற்கனவே கூறிய

விடயம் எதுவென்றறியும் ஆவல் மிகுந்தது அவனிற்கு.

“அரசே, வருகின்ற சித்திரை முழுநிலவு நாளிலே தான் வன்னியர் விழா நிகழ்த்தப்போகிறார்களாம்.”

கூறிமுடித்த உக்கிரசேனன் வன்னியத்தேவன் முகத்தினை கூர்மையாக அவதானித்தான்.

வன்னியனின் விழிகள் பிதுங்கி வெளிவருவது போல் இருந்தன. கருவிழி முழுதும் வெளியே தெரியும் வண்ணம் ஒலிவேராவை நோக்கினான்.

“என்ன சித்திரை முழுநிலவு நாளிலா? ”

“ஆம் பிரபு”

கூறிவிட்டு அமைதியாகவே நின்றான் உக்கிரசேனன்.

“எப்படி..? எப்படி? அறிந்து கொண்டான் சங்கிலி எம் இரகசிய திட்டத்தை.. நிச்சயம் இது அந்த ஏகாம்பரம் தொட்டமனாரின் சூழ்ச்சி தான்! ஆ..”

மிகுந்த பணிவோடு உக்கிரசேனன் கேட்டான்



“பிரபு, என்ன சூழ்ச்சியைப்பற்றிப் பேசுகிறீர்கள்?
எனக்கு எதுவும் விளங்கவில்லையே”

“நீ கூட அறியாத அந்த இரகசிய திட்டத்தை அந்த மந்திரி எப்படி அறிந்தான்?
அடேய்...!”

கோபத்தில் செய்வதறியாது நின்றான் வன்னியத்தேவன்.

“பிரபு, தாங்கள் ஏதோ இரகசியத்திட்டம் குறித்து கவலை கொள்கிறீர்கள். நான் அது என்னவென்று அறிந்து கொள்ளலாமா?”

என மெதுவான குரலில் வன்னியத்தேவனை நோக்கிக் கேட்டான் உக்கிரசேனன்.

வன்னியத்தேவன் கோபமாக உக்கிரசேனனைப் பார்த்தான். உக்கிரசேனன் பயங்கொண்டவன் போல் பாவனை செய்தான்.

“அத்திட்டம் தான் இல்லை என்று ஆகி விட்டதே, இனி நீ தெரிந்து கொண்டு என்ற செய்யப் போகிறாய்?”

கோபம் அடங்காதவனாய்க் கொந்தளித்தான் வன்னியத்தேவன்.

அப்போது ஒலிவேரா வன்னியத் தேவனை நோக்கிக் கூறினான்.

“இதனால் என்ன ஆகிவிடப்போகிறது வன்னியத்தேவரே, எம் திட்டத்தை முறியடிப்பதில் அவர்கள் வெற்றி கொண்டதாய் எண்ணிக் கொள்ளட்டும். பரவாயில்லை. எம் இலக்கை அவர்களால் ஒரு போதும் வெல்ல முடியாதே, நாம் அடுத்த திட்டத்தை நோக்கி முன்னேறிக் கொண்டே இருப்போம்.”

“சரியாகச் சொன்னீர் ஒலிவேரா அவர்களே, எங்கள் இரகசிய திட்டத்தை அந்த மந்திரி எப்படியோ மோப்பம் பிடித்து விட்டான். இருக்கட்டும். நீங்கள் சொல்வது போல் நாம் இப்போது அடுத்ததிட்டம் குறித்துச் சிந்தித்தாக வேண்டும்”

இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த உக்கிரசேனன் முகத்தில் இவர்களது இரகசியத் திட்டம் எதுவென்று புரியாத குழப்பம் தெளிவாகவே தெரிந்தது. சித்திரை முழுநிலவு நாளில் மந்திரியார் வன்னியர் விழாவை நடாத்துவதற்கு தீர்மானித்தமைக்கு ஏதோ வலுவான காரணம் இருப்பதாய் தான் சந்தேகித்தது சரிதான் என்று புரிந்து கொண்டான். ஆனால் அது என்ன இரகசியத்திட்டம் என்பது தான் அவனிற்கு இன்னும் விளங்கவில்லை.

ஆனால் வன்னியத்தேவன் அதை இனி கூறப்போவதில்லை என்பதையுணர்ந்த உக்கிரசேனன்

“அதை எப்படியும் நான் தெரிந்து கொள்ளாமலா போய்விடுவேன்.” என்று தனக்குள் எண்ணிக் கொண்டான்.

“என்ன உக்கிரசேனா, என்ன

சிந்தனையில் இருக்கின்றாய்? இரகசியத்திட்டம் என்னவென்று உன் மேதாவி அறிவைக் கொண்டு சிந்தித்தே கண்டுபிடிக்க முயல்கிறாயோ...”

“ஐயோ, அது எங்ஙனம் என்னால் இயலும் பிரபு, நான் சிந்தித்துக் கொண்டிருந்தது வேறு விடயம் ஒன்றைப்பற்றி. சித்திரை முழுநிலவு நாளில் வன்னியர் விழாவை நிகழ்த்துவது தங்களிற்கு ஏதோ இடர்பாட்டைத் தருகிறது என்று மட்டும் அறிகிறேன். அதேபோல் இன்னொருவரும் அவ்விழாவினால் பெருந்துன்பத்தைப் அனுபவிக்கப்போகிறார். அது குறித்துத்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன் பிரபு”

“யார் அது உக்கிரசேனா? ”

“சித்திராங்கதா பிரபு, பெருவணிகர் எச்சதத்தர் மகள். அவளுடைய நாட்டிய அரங்கேற்றமும் அந்நாளில் தான் நிகழ ஆயத்தங்கள் இருந்தன. எல்லாவற்றையும் மாற்றிவிட்டார் அரசர். இப்போது அவள் பெருங்கோபத்தில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். வரும் வழியில் இந்த விடயத்தை அவர்கள் காதிலும் சற்று அறியும்படி கூறிவிட்டுத்தான் வந்தேன்.”

“அந்த நாட்டியக்காரி கோபங் கொள்வதில் எனக்கென்ன ஆதாயம் இருக்கப்போகிறது உக்கிரசேனா? அவசியமற்ற விடயங்களை எதற்காக ஆர்ப்பரித்துக் கூறுகிறாய்?”

“அவசியமிருக்கிறது பிரபு, சித்திராங்கதாவின் இல்லத்தைத் தேடி ஒரு மாவீரன் அலைந்ததாய் நான் முன்னர் ஒருமுறை கூறினேனே, ஞாபகமிருக்கிறதா பிரபு?”

“ஓகோ!
புரிகிறது உக்கிரசேனா, புரிகிறது! இது குறித்து நான் இன்னும் சிந்திக்கிறேன்.”

என்று உக்கிரசேனனது தோள்களில் தட்டியபடியே கூறிய வன்னியத்தேவன் திடீரென்று அந்தக்கூடாரத்தின் மேற்கூரையை பார்த்தபடி கர்வத்தோடு பேசத் தொடங்கினான்.

“அடேய் சங்கிலியா, உன்னை வீழ்த்துவதற்கு பேராயுதங்கள் திரட்ட வேண்டும் என்று நினைத்தேன். சிறு துரும்பு போதும் என்று நீயே உணர்த்தி விட்டாய். என் திட்டத்தை முறியடிக்க அவசரமாய் வன்னியர் விழா நிகழ்த்துகிறாயோ? வருகிறேன்.. வன்னியர் விழாவிற்குத் தக்க சன்மானம் கொண்டு வருகிறேன். காத்திரு!”

என்று கூறி மீண்டும் விலா நோகச் சிரித்தான்.

***நீங்களும் காத்திருங்கள். இனி நாமும் வன்னியர் விழாவில் சந்திப்போம்.***



காலப்பந்து ரசிகர்களுக்கு...

# கொடையாகிப்போன கோடை.......!!!



வைகரன்

சர்வதேச கால்பந்து திருவிழா: மெஸ்ஸி இன் கையில் சர்வதேச கிண்ணம்

சர்வதேச கால்பந்து ரசிகர்களுக்கு இந்த வருட கோடை கால விடுமுறை விருந்தாக Euro கிண்ணம் மற்றும் Copa America தொடர் என இரண்டு முன்னணி சர்வதேச கால்பந்து தொடர்கள் ஒன்றாக அரங்கேறியுள்ளது.

Covid-19 தொற்று காரணமாக சென்ற வருடம் நடைபெற இருந்த Euro கிண்ணம் பிற்போடப்பட்டு இவ் வருடம் Copa America தொடருடன் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது.

## Euro கிண்ணம் 2020

ஒரு வருடம் ஒத்தி வைக்கப்பட்டு பெரும் எதிர்பார்ப்புடன் ஆரம்பித்த தொடரில் எதிர்பார்ப்புக்கு தீனி போடும் வகையில் Group of Death என்ற பேரில் குழு F இல் முன்னாள் சாம்பியன்களான போர்த்துக்கல் ஜெர்மனி பிரான்ஸ் என முன்னணி அணிகள். பாவம் Hungary Group of Death இல் போய் சிக்கிட்டுது என்று நாமெல்லாம் Hungary ஐ நினைச்சு கவலை கொள்ள, Hungary மற்றைய 3 அணிகளுக்கும் சாவு பயம் காட்டி Group of Death இல் தன் பங்கிற்கு சுவாரஸ்யம் ஊட்ட குழு நிலையிலேயே தட்டு தடுமாறி போர்த்துக்கல் ஜெர்மனி பிரான்ஸ் அணிகள் Knock out சுற்றுக்கு தகுதி பெற்றன.

மறுபுறம் இத்தாலி நெதர்லாந்து பெல்ஜியம் இங்கிலாந்து என சத்தமில்லாமல் knock out சுற்றுக்கு நுழைந்தன. ஆனால் ஸ்பெயின் மற்றும் போலந்து குழு E இல் மாட்டி கொண்டு தடுமாற ஸ்பெயின் மட்டும் வெற்றிகரமாக அடுத்த சுற்றுக்கு செல்ல போலந்து குழு நிலையுடன் வீட்டுக்கு திரும்பியது. இவற்றை தவிர குழு நிலை போட்டிகளில் குறிப்பிட வேண்டிய அணிகள் டென்மார்க் மற்றும் செக் குடியரசு.





முதல் போட்டியில் டென்மார்க் அணிக்கு மட்டுமில்லாமல் கால்பந்து உலகிற்கே அதிர்ச்சி அளித்த Christian Eriksen இன் மாரடைப்பு. எனினும் மீண்டு(ம்) வந்து knock out சுற்றுகளை எட்டி பாத்தது Denmark.

Round of 16 இல் முன்னாள் சாம்பியன் Portugal அணியின் பயணத்திற்கு பெல்ஜியம் அணி முற்று புள்ளி வைத்தது. ஜெர்மனி இன் கதையை England முடித்து வைத்தது. பிரான்ஸ் Switzerland இடம் தோல்வி கண்டு தாமாகவே வெளியேறியது. Group of Death இன் 3 அணிகளும் வெளியேற Netherlands க்கு அதிர்ச்சி அளித்து செக் குடியரசு காலிறுதிக்கு தகுதி பெற்றது.



காலிறுதியில் முக்கிய போட்டியில் இத்தாலி பெல்ஜியம் அணிகள் மோத இத்தாலி வெற்றி பெற்று தனது இருப்பை உலகுக்கு அறிவிக்க England 'It's coming Home' என்று அரை இறுதியில் வந்து அறை கூவல் இட்டது. ஸ்பெயின் போராடி அரை இறுதிக்கு வந்து சேர்ந்தது. யாரும் எதிர் பாராத காலிறுதி போட்டியில் Denmark மற்றும் செக் குடியரசு அணிகள் மோத ரசிகர்களின் ஆதரவில் அரை இறுதிக்கு சென்றது Denmark.




அரை இறுதியில் இத்தாலி ஸ்பெயின் அணியை வென்று பழி தீர்க்க England Denmark அணியின் பயணத்தை அரை இறுதி உடன் முடித்து வைக்க Euro கிண்ணம் 2020 இறுதி போட்டியில் இத்தாலி மற்றும் England அணிகள் மோத தயாராகின. It's Coming Home என England கூவ No No It's Coming to Rome என England ஐ இழுத்து விழித்தி Euro கிண்ணத்தை Rome இற்கு எடுத்து சென்றது இத்தாலி.

2018 உலக கிண்ணத்திற்கு தகுதி பெறாத இத்தாலி தொடர்ச்சியாக

34 போட்டிகள் வெற்றி பெற்று Euro கிண்ணத்தை கைப்பற்றியதை இத்தாலி ரசிகர்கள் மட்டுமல்லாமல் உலக ரசிகர்களும் இணைந்து கொண்டாட இங்கிலாந்து ரசிகர்கள் இதற்கு முன் யாரும் Penalty வாய்ப்பை தவற விட்டதில்லை என்ற நினைப்பில் இறுதி போட்டியில் Penalty வாய்ப்பை தவறவிட்ட Sancho, Rashford மற்றும் Sakho it வறுத்தெடுக்க Euro கிண்ணம் Rome இல் காட்சி படுத்தப்பட்டது.

## Copa America 2021



10 அணிகள் பங்கேற்ற Copa America தொடரில் உலகத்தின் எதிர்பார்ப்பு Messi Copa America வை வெல்வாரா இல்லையா என்பது மட்டுமே.

இரண்டே குழுக்கள். ஒரு பக்கம் Argentina மறு பக்கம் Brazil என எதிர் பார்த்தது போலவே இவ் இரு அணிகளின் ஆதிக்கமே இருந்ததது. குழு நிலை போட்டிகள் வெறும் கண் துடைப்பென காலிறுதிக்கு தகுதி பெற்றன முன்னணி அணிகள். காலிறுதியில் Argentina தான் விளையாடிய போட்டியை விட Brazil Chile அணிகள் மோதிய



போட்டியை ஆவலாக எதிர் பார்த்திருக்கும். காரணம் Chile அணி முந்திய தொடர்களில் Argentina கு ஏற்படுத்திய வடுக்கள். ஒழிந்தது சனி என Argentina ஆனந்தம் அடையும் வகையில் காலிறுதியில் Chile வெளியேறியது. Chile உடன் Uruguay அணியும் வெளியேற அரை இறுதியில் Argentina Colombia அணியையும் Brazil Peru அணியையும் எதிர் கொண்டன. IPL ல Mumbai Chennai Final விளையாடுற மாரி அரை இறுதி போட்டிகளில் வென்று இறுதி போட்டியில் மோதின Argentina மற்றும் Brazil.

ஒரு புறம் மெஸ்ஸிக்காக Argentina கிண்ணம் வெல்லனும் என நடுநிலை ரசிகர்களும் Ronaldo இன் 2016 Euro கிண்ண வெற்றியை சமப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் மெஸ்ஸி



ரசிகர்களும் Argentina பக்கம் சாய Brazil பக்கம் Ronaldo ரசிகர்கள் மெல்ல சாய அந்த பக்கம் Neymar ஐ கண்டு சற்று பின்வாங்கி மெஸ்ஸிக்கு Neymar பரவால்ல என Brazil பக்கமே நின்று கொண்டார்கள்.



ஒட்டு மொத்த உலக எதிர் பார்ப்பு ஒன்று தடையின்றி நிறைவேறியது. ஜூலை 10 2021 கால்பந்து உலகில் மறக்க முடியாத நாளானது. Argentina என்ற பேரில் Copa America 2021 இன் சாம்பியன் ஆனார் Messi. கடந்த முறைகளில் தனியே போராடிய Messi இம்முறை சக வீரர்களின் ஒத்துழைப்பில் கிண்ணம் வென்றார்.

2014 உலக கிண்ண இறுதி போட்டி தோல்வி.
2015 Copa America இறுதி போட்டி தோல்வி.
2016 Copa America இறுதி போட்டி தோல்வி.

வரிசையா இறுதி போட்டியில் தோல்வியுற்று ஓய்வின் விளிம்பில் நின்று திரும்பிய Messi ”கையிலே ஆகாசம்...” என்று பாடல் ஒலிக்க Copa America கிண்ணத்தை தூக்கினார்.

Messi Copa América வென்றது மட்டுமல்லாமல் ஏறத்தாழ அனைத்து தனி நபர் விருதுகளையும் வென்றார். மெஸ்ஸி தவற விட்ட சாதனை சிறந்த கோல் காப்பாளர் விருதாக மட்டுமே என்னும் அளவிற்கு மற்றைய எல்லாத்தையும் வென்று மெஸ்ஸி Ronaldo விவாதங்களில் Ronaldo இன் Euro கிண்ண வெற்றியை முன்நிறுத்துவுபவர்கள் முன் கெத்தாக நின்றார்.

Messi Ronaldo விவாதம் முடிந்தது. மெஸ்ஸி வெற்றியாளர் என்று முடிவாகும் தருணத்தில் Euro கிண்ணம் 2020 இல் Round of 16 இல் வெளியேறிய Ronaldo வெறும் 4 போட்டிகளில் விளையாடி Euro Golden Boot வென்று தனது இருப்பை உறுதி படுத்த பட்டிமன்ற தீர்ப்பு போல் மெஸ்ஸி Ronaldo விவாதம் மெஸ்ஸியும் Ronaldoவும் ஒண்ணு இருவரும் நமக்கு கிடைத்தமைக்கு பெருமைப்படுகிறது இந்த உலக மண்ணு என முடிவாகியது.

